ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

21.12.2011 - மலர் 08, இதழ் 42








விஜய்
ரூபா 5½ லட்சம் பெறுமதியான
வவுச்சர்களை வெல்லவும்
10% விலைக்கழிவையும்
பெறுவதற்கான சந்தர்ப்பம்....
Bata
B.first
SCHOOL SHOES


விலை
ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலேயரின் நிபந்தனை

சென்னையில் இருந்த இலங்கை பிரதிநிதிகளுக்குச் சில நாட்களாக எந்தவித நிரந்தர தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை. இதற்கிடையில் அன்ட்ரூஸ் அவர்கள் மன்னனிடம் மிகவும் பயனுள்ள ஒப்பந்தப்பத்திரம் ஒன்றை முன்வைத்தார். அதற்கு பிரதிநிதிகளினதும் விருப்பத்தைப் பெற்றுக்கொண்டார்.

வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தத்தில் ஆயிரம் தோணிகளையும் மன்னனுக்குப் பயன்படுத்தும் விதத்தில் சந்தர்ப்பம் வழங்குவது என்பது அதில் ஒரு நிபந்தனையாகும். அவ்வாறே, மன்னனுக்கு உரித்தான பிரதேசங்களில் ஆங்கிலேயர்கள் தலையிடுவதில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், ஒல்லாந்தர்களால் மன்னனுக்கு உரித்தான மரபுரிமைகள் பலவற்றை பலாத்காரமாகக் கைப்பற்றியிருந்ததாக மன்னன் முறையிட்டிருந்தார். அதனால், கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இது குறித்த நடவடிக்கைகளை எடுப்பதாகவும் வாக்குறுதி வழங்கியது.

சமாதான நிலை ஏற்பட்டவுடன், அவற்றை மன்னனிடம் மீளக் கையளிப்பதாகவும் உறுதி கூறினர். அத்தோடு, பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஒல்லாந்தருக்குச் சொந்தமான பிரதேசங்களைக் கைப்பற்றி தமக்குரிமையாக்கிய பின் மன்னனுக்குப் பெருந்தொகையான மீன்களையும் உப்பையும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் கடலோரப் பிரதேசமொன்றை பெற்றுத்தருவதாகவும் அந்த நிபந்தனைகளில் அடங்கியிருந்தது.

இதுபோன்று மன்னனுக்கு சாதகமான நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தம் இதற்கு முன் ஒருபோதும் மன்னனிடம் கையளித்ததில்லை. இதனைவிட, அதிக பயனைப் பெறுவதற்கு பிரதிநிதிகள் முயற்சித்தனர். அதன்பின் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அடுத்த நடவடிக்கையாக மன்னனைச் சந்தித்து இந்த ஒப்பந்தத்தை உறுதிசெய்வது மாத்திரமே எஞ்சியிருந்தது. அதனை நிறைவேற்றுவதற்காக, அன்ட்ரூஸ் பிரதிநிதிகளை மீண்டும் ஒருமுறை கண்டிக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேற்றில் இருந்து மின்சாரம்

## இஸ்ரேல் கண்டுபிடிப்பு





சேற்றில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை இஸ்ரேல் கண்டுபிடித்துள்ளது. இஸ்ரேல் ஆரம்பித்துள்ள உலக மீள்சுழற்சித் திட்டத்திற்கமைவாக செயல்பட உத்தேசித்திருக்கின்ற ஜி.ஆர்.பி.எல் நிறுவனமே (Global Recycling Projects Ltd) இக் கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளது. ஆற்றுப்படுகையில் சேர்கின்ற சகதியில் அடங்கியிருக்கும் மின் அழுத்த சக்தியிலிருந்தே மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது.

சேற்றில் இருந்து மின் உற்பத்தி செய்வதற்குத் தேவையான டர்பைன்களை இயக்குவதற்கு சூரியசக்தி பயன்படுத்தப்படவுள்ளது. சூரிய சக்தியூடாக டர்பைன்கள் இயக்கப்பட்டு அதன்மூலம் சகதியானது வெப்பமேற்றப்படுகின்றது. பின்னர் அதிலிருந்து வாயு வெளிப்பட்டு டர்பைன் வழியாக மின்சாரம் உற்பத்தியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், சேற்றிலிருந்து மட்டுமன்றி, நீரில் நனைந்த குப்பைகளில் இருந்தும் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பம் தற்போதளவில் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# நாடளாவிய ரீதியில் ஐயாயிரம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

## கல்வித்துறை பிரதி அமைச்சர் தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் 5,000 அதிபர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுவதாக கல்வித்துறை பிரதியமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார். அண்மையில் நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலானவர்கள் பதில் அதிபர்களாகவே கடமையில் ஈடுபட்டுள்ளனர். பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. பரீட்சைகளை நடாத்தி கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் தகைமைகளின் அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக கல்வித்துறை பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




# அரசாங்க பாடசாலைகளுக்கு மலசலகூட வசதிகள்



**நாட்டின் சகல அரசாங்க பாடசாலைகளிலும் தேவைக்கேற்றளவு மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**பாடசாலைகளில் மலசலகூட வசதிகள் போதியளவு இல்லாதிருப்பதாக மாணவர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**


விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# ஜனவரி–நொவெம்பர் வரை எலிக்காய்ச்சலால் 78 பேர் பலி

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் தொடக்கம் நொவெம்பர் மாத நடுப்பகுதி வரை எலிக்காய்ச்சலால் 5,893 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் 78 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் ஆய்வறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குருநாகல் மாவட்டத்திலேயே, அதிக எண்ணிக்கையிலானோர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு 1,511 பேர் பாதிப்புக்குள்ளாகி இருப்பதுடன், அவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். அதற்கடுத்ததாக, இரத்தினபுரி மாவட்டத்தில் 543 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேல் மாகாணத்தைப் பொறுத்தவரையில், எலிக்காய்ச்சலால் 1,254 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் 28 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உடலிலுள்ள காயங்களினூடாக, எலியின் சிறுநீரிலுள்ள பக்றீரியா நோய்க் கிருமி உட்செல்வதனாலேயே, எலிக்காய்ச்சல் ஏற்படுகின்றது. எனவே, வயல்வெளிகள் மற்றும் நீர் தேங்கியிருக்கும் இடங்களில் வேலை செய்யும்போது அவதானமாக செயற்படும்படியும் வீட்டுச் சூழல், பாவனைக்குட்படுத்தும் பாத்திரங்கள் மற்றும் பொருட்களை பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கும்படியும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.





O/L பரீட்சையின் பின்னர் உங்கள் அடுத்த இலக்கு என்ன ?
2011 ம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் - மான விசேட தபால் மூல ஆங்கில பாடநெறி ஆரம்பமாகவுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு பெயர் முகவரியை
SMS செய்யுங்கள் 0774-348434
or தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்
JEI INSTITUTE-P.O.Box.119,Kandy

60 Day's BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
7 வயது தொடக்கம் பெரியோர் வரை அனைவருக்கும் என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று PHONE SIM CARD மற்றும்
30 DAY'S EASY WAY ENGLISH புத்தகம் ஒன்று என்பன
இலவசமாக வழங்கப்படும்
எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy) களுக்கு செல்லுபடியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சமுதாயத்திற்குப் பயன்தரும் அற்புதமான கண்டுபிடிப்புகள்

## போக்குவரத்து சமிக்ஞை (Traffic Signal)





நவீன மின்சாரத்தில் இயங்கும் போக்குவரத்து சமிக்ஞையை (Electric Traffic Signal) 1912 ஆம் ஆண்டு லெஸ்டர் வயர் என்ற அமெரிக்கர் கண்டுபிடித்தார். முதன்முதலாக மூவர்ண மின்சாரப் போக்குவரத்து சமிக்ஞை நியூயோர்க் நகரில் 1918 ஆம் ஆண்டு பொருத்தப்பட்டது. எனினும், பிரித்தானியாவில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே அதாவது, 1850 களிலேயே 'கேஸ்' மூலம் இயங்கும் சமிக்ஞைகள் முக்கிய சாலைச்சந்திகளில் பொருத்தப்பட்டு இயங்கின. 1868 இல் பிரித்தானிய நாடாளுமன்றம் அருகே பொருத்தப்பட்டிருந்த கேஸ் சமிக்ஞை (வாயு சமிக்ஞை) வெடித்துப் போக்குவரத்து காவல்துறை அதிகாரி ஒருவர் உயிரிழந்த காரணத்தால், அங்கு போக்குவரத்து சமிக்ஞை முற்றாக நிறுத்தப்பட்டது. அதன்பின் அமெரிக்காவில் நடைமுறைப்படுத்தப்பட்டு, 7 வருடங்களின் பின் அதாவது 1925 இல் மீண்டும் லண்டன் மாநகரில் போக்குவரத்து சமிக்ஞைகள் பொருத்தப்பட்டு இயங்கத் தொடங்கின.

## தொலைக்காட்சி







ஜோன் லொஜி பைர்ட் 1926 ஆம் ஆண்டிலும் விளாடிமிர் ஸ்வோரிகின் 1925-1928 இற்கும் இடைப்பட்ட காலத்திலும் தொலைக்காட்சியைக் கண்டறிந்து உலகிற்கு அளித்தனர். ஜோன் லொஜி பைர்ட் நகரும் படங்களை அனுப்பக்கூடிய இயந்திரவியல் முறையைக் கண்டுபிடித்து, 1926 இல் உலகின் முதலாவது தொலைக்காட்சியை வடிவமைத்தார். இதற்கிடையே, விளாடிமிர் மின்னணுவியல் முறையில் தொலைக்காட்சியை உருவாக்கினார். இவ்விரு முறைகளையும் இணைத்து 1936 இல் பிரிட்டிஷ் வானொலி நிலையமான பி. பி.சி (B.B.C) தினசரி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தது. இதுவே உலகில் முதலாவது தொலைக்காட்சி சேவை ஆகும். உலகின் முதலாவது வண்ணத் தொலைக்காட்சி முறை 1951 இல் ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பமானது. இலங்கையில் தொலைக்காட்சி சேவை 1979 ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. தற்போது மின்னணு முறையில் வளர்ச்சிகண்ட அதிநவீன L.C.D மற்றும் L.E.D திரைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## நுணுக்குக்காட்டி (Microscop)





1590 ஆம் ஆண்டு ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த சக்கரியாஸ் ஜோன்சன் என்பவரே சிறியனவற்றை பெரிதுபடுத்திக் காட்டும் நுணுக்குக்காட்டியைக் கண்டுபிடித்தார். கலிலியோ கலிலி அவர்களும் பூச்சிகளின் கண்களைப் பரிசோதிக்க நுணுக்குக்காட்டி போன்றதொரு கருவியைப் பயன்படுத்தி இருக்கிறார். 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த அன்ட்டன் லீவென்குக் என்பவரே, நுணுக்குக்காட்டியின் மூலம் பக்றீரியா போன்ற நுண்ணிய கிருமிகளைப் பார்க்கும் அளவிற்கு அதன் தரத்தை மேம்படுத்தினார். ஜோன்சன் உருவாக்கியதைவிட, மிகச் சிறப்பான (லென்ஸ்) வில்லைகளை அவர் பயன்படுத்தினார். இதே காலகட்டத்தில் பிரித்தானிய விஞ்ஞானியான ரொபர்ட் ஹுக் என்பவர் 'மைக்ரோகிராபியா' என்ற நூலை வெளியிட்டார். அதில் நுணுக்குக்காட்டி மூலம் பார்க்கும்போது, சிறிய பொருட்கள் எவ்வாறு காட்சியளிக்கின்றன என்பது மிகத் தெளிவாக வரையப்பட்டிருந்தது. அது பற்றிய தெளிவான விளக்கமும் எழுதப்பட்டிருந்தது. அதன்பின்னரே, உலகெங்கும் நுணுக்குக்காட்டி மிகவும் பிரபலமானது. நுண் உயிரியல் மற்றும் மருத்துவ ஆய்வுகள் வளர இக்கண்டுபிடிப்புகளே முக்கிய காரணியாக அமைந்தன.

## தொலைபேசி













இன்றைய பிரித்தானியாவின் ஒரு பகுதியாகிய ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் கிரஹம் பெல் அவர்களே 1876 ஆம் ஆண்டு முதன்முதலாக தொலைபேசியைக் கண்டுபிடித்தார். ஆரம்பத்தில் கம்பியுடன்கூடிய இத் தொலைபேசிகள் பின்னர் படிப்படியாக வளர்ச்சி அடைந்து கம்பியில்லா வயர்லெஸ் தொலைபேசி வரை பரிணமித்தது. இச்சாதனத்தைக் கண்டறிந்த அலெக்ஸாண்டர் கிரஹம் பெல் ஒரு சிறந்த மருத்துவ மேதையாகவே திகழ்ந்தார். காது கேளாத குழந்தைகளோடு பணியாற்றிக்கொண்டிருந்த அவருக்கு, இத்துறையில் பெரிதும் ஆர்வமும் அக்கறையும் இருந்த காரணத்தால், அதிர்வு ஏற்படுத்தும் ஒலி பற்றி மிகத் தீவிரமாக ஆராய்ந்தார். இத் தீவிர முயற்சியின் பயனாக, அதிர்வுகளை மின்சாரமாகவும் அதனை மீண்டும் அதிர்வுகளாகவும் மாற்றும் முறையை 1876 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். இதுவே தொலைபேசியின் முக்கிய அடித்தளமாக அமைந்தது. அதன் பின்னர் 1877 இல் தோமஸ் அல்வா எடிசன் மேலும் சிறப்பான தொலைபேசியை உருவாக்கினார். இன்று மிக நவீனத்துவம் அடைந்துள்ள இத்துறையில் கையடக்கத் தொலைபேசிகளே முக்கியத்துவம் பெற்றுள்ளன. சிறிய ஒரு கணிவிக்குச் சமன் என்ற அளவிற்கு கையடக்கத் தொலைபேசிகள் அதிநவீனத்துவம் அடைந்துவிட்டன.

## ஒலிப்பதிவு நாடாக்கருவி (Tape Recorder)





தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதன்பின் அத்தொலைபேசிச் செய்தியைப் பதிவு செய்ய உருவாக்கப்பட்டதே இந்த ஒலிப்பதிவு நாடாக் கருவியாகும். நாளடைவில் இது இசை சாதனமாகி வீடுகள் தோறும் வலம் வரத் தொடங்கிவிட்டது. 1898 ஆம் ஆண்டு டென்மார்க்கைச் சேர்ந்த வொல்டெமர் போல்சன் என்பவரே. இந்த ஒலிப்பதிவு நாடாக் கருவியைக் கண்டுபிடித்தார்.

## தொலைநோக்கி (Telescope)








மிகத் தொலைவில் இருப்பவற்றைக்கூட, அருகாமையில் காட்டி, துல்லியமாகப் பார்க்க உதவும் டெலஸ்கோப் எனப்படும் தொலைநோக்கியை 1608 ஆம் ஆண்டு ஹான்ஸ் லிப்பர்ஷே என்ற டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) உருவாக்கினார். எனினும், இதனை 1609 இல் கலிலியோ கலிலி அவர்களே முதன்முதலாகப் பயன்படுத்திவார். அதன்பின் இது படிப்படியாக வளர்ச்சியடைந்து பிரதிபலிக்கும் தொலைநோக்கிகள், பைனாகுலர்கள் என வெளிவரத்தொடங்கின. 18 ஆம் நூற்றாண்டில் கண்ணாடி அணிவதற்குப் பதிலாகச் சிறிய தொலைநோக்கிகளை பலர் தூக்கித் திரிந்ததாகவும் ஒரு விசித்திர தகவல் உண்டு.

## வானொலி







இன்றுவரை உலகின் மிக எளிமையான, மிக வலிமையான தொலைத் தொடர்பு சாதனம் வானொலியே.செய்தி, பாடல், நாடகம், தகவல் உள்ளிட்ட இன்னோரன்ன பொழுதுபோக்கு அம்சங்களைத் தன்னகத்தே தாங்கியுள்ள வானொலிக் கருவியை மார்க்கோனி எனும் ஆங்கிலோ இத்தாலியர் கண்டுபிடித்தார். 1895 இல் இவர் கண்டறிந்த இந்த வானொலியானது, நடைமுறையிலான கம்பியில்லாத் தந்தி முறையாகும். இத்தகைய சிறப்புச் சாதனத்தை அக்கால இத்தாலியர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இச்சாதனம் கண்டுபிடிக்கப்பட்ட அடுத்த ஆண்டாகிய 1896 இல் மார்க்கோனி அதனை பிரித்தானிய அஞ்சல் துறைக்கு விற்றுவிட்டார். 25 வருடங்களின் பின் அதாவது, 1920 இல் குரலையும் வானொலி அலைகள்மூலம் அனுப்ப முடியும் என்பதை மார்க்கோனி கண்டறிந்தார். இதனால், ஹெட்போன்களுடன் கூடிய வயர்லெஸ் அமைப்புகளை அவரது நிறுவனம் உற்பத்தி செய்தது. இதற்கமைவாக, உலகின் முதலாவது ஒலிபரப்பு அதே ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகியது. அதே ஆண்டு அதாவது 1920 ஜூனில் பாடல் முதன்முதலாக ஒளிபரப்பப்பட்டது. இதனால், பிரித்தானிய அஞ்சல் துறை இந்தப் பொழுதுபோக்கு ஒலிபரப்பைத் தடை செய்தது. அடுத்த ஆண்டு இத்தடை நீக்கப்பட்டு, வாரம் 15 நிமிடங்களுக்கு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப அனுமதிக்கப்பட்டன.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



நாபாவளை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான எஃப்.ஸாரா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அக்ரம்-சித்தி பாத்திமா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப்.பஹறாமா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவியான இவர், அமீர் பாஹிம்-ருஹறாரா தம்பதியரின் புதல்வியாவார்.



நாங்கல்ல முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான எஃப்.அம்னா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஹமட் லெப்பே-இஸ்ஸதுல் சரீனா தம்பதியரின் புதல்வியாவார்.



கொட்டகலை தமிழ் வித்தியாலய மாணவனான ஆர்.லஷ்மிகாந்த், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/ஹைஹன்போட் மாபாகந்த முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.எல்.அஹமட், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், லாபிர்-சாமிலா தம்பதியரின் புதல்வராவார்.



கொ/கைரியா முஸ்லிம் ம.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எஃப்.பயாஸா, 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மாறை/அஸ்ஸபா முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய மாணவியான எஃப்.ரிம்ஸா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வட்டகொட தமிழ் மகா வித்தியாலய மாணவியான பூ.மதுஷா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வஸிப் அஸீ, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவனாவார்.



ந.ஜெயந்தினி, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வட்டகொட தமிழ் மகா வித்தியாலய மாணவியாவார்.



எம்.றிஸ்லி, 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவனான இவர், றாமிஸ்-பஸ்மியா தம்பதியரின் புதல்வராவார்.



ஆர்.பிரியங்கா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வட்டகொட தமிழ் மகா வித்தியாலய மாணவியாவார்.



களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவனான ஏ.ராஷித், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரிஸான்-ஹலீமா தம்பதியரின் புதல்வராவார்.



க/அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியான எம்.ஆர்.சாரா, 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், றிழ்வான்-றிஸ்னா தம்பதியரின் புதல்வியாவார்.



களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவனான எம்.ரிப்தான், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜுவைம்-றிஸ்வியா தம்பதியரின் புதல்வராவார்.



க/அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியான எம்.ஏ.பாத்திமா, 172 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஸீம்-நஸ்ரீன் தம்பதியரின் புதல்வியாவார்.



**கமு/மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய மாணவர்களான பாமி அஹமட் (176 புள்ளிகள்), என். அக்மா (175 புள்ளிகள்), எஃப்.சிம்தா (174 புள்ளிகள்), எஃப்.டில்ஷா (172 புள்ளிகள்), எஃப்.அப்றா (171 புள்ளிகள்), எஃப்.நுஸ்லா (164 புள்ளிகள்), ஆஸப் றிதா (163 புள்ளிகள்), நாஜித் நிஸாத் (163 புள்ளிகள்), எஃப்.ஷிபா (163 புள்ளிகள்), எம். அஸ்பக் (161 புள்ளிகள்), எம்.சப்றி (159 புள்ளிகள்), ஹனூப் அஸ்ஹத் (157 புள்ளிகள்), சவ்ஜன் நுஹா (155 புள்ளிகள்), எம்.ஹஸ்நபர் (154 புள்ளிகள்), ஜெய்ஸ் அகமட் (154 புள்ளிகள்), எம். அஸ்வி (152 புள்ளிகள்) ஆகியோருடன் பாடசாலை அதிபர் எம்.பதுறுத்தீன், கற்பித்த ஆசிரியர்களான உம்முல் பரீதா மற்றும் எம். அபூதுறாப் ஆகியோரும் காணப்படுகின்றனர்.**

# உங்கள் வாழ்க்கை கைகளில்...



## கல்வி



## முகாமைத்துவம் - 86

### கற்றலுக்கான ஆலோசனைகள்



நம் ஒவ்வொருவருக்குமிடையிலும் எதிர்பார்ப்புக்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள், செயற்பாடுகள் என்பனவற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் நிலவத்தான் செய்கின்றன. அதன்படியே, ஒவ்வொருவரது வாழ்க்கையும் தீர்மானிக்கப்படுகிறது. எனவே, அந்த வாழ்க்கையை சிறப்பாக வழிநடத்திச் செல்லவேண்டியது நமது கடமையாகும். அதில்தான் ஒவ்வொருவரது திறமையும் அடங்கியிருக்கின்றது.

'வாழ்க்கை' என்பது பணம், குணம், கல்வி, அழகு என ஏதாவது ஒன்றில் மட்டும் தங்கியிருப்பதன்று. மாறாக, வாழ்க்கை என்பது அனைத்து அம்சங்களையும் பரந்துபட்ட வகையில் தாங்கி நிற்பதாகும். அவ்வாறான பரந்துபட்ட அம்சங்களை மிகச் சிறப்பாக அணுகி, திறனோடு நடைமுறைப்படுத்தினால், எமது பாதையை நாம் சரியாக அமைத்துக்கொள்ளலாம். அந்தவகையில், எம்முடைய ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பழக்கத்திற்கும் நாமே உரிமை கோரக்கூடியவர்களாக இருக்கின்றோம். தவிர, நாம் செய்யும் தவறுகளுக்காக, மற்றையவர்கள் மீது வீண்பழி சுமத்துவதோ, கடவுள் மீது காரணம் காட்டுவதோ முறையல்ல. ஏனெனில், நமது வாழ்க்கை நமது கையிலேயே தங்கியுள்ளது.

அதன்படி, நான் எதைத் தெரிவுசெய்தால் எனது வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பதைத் தீர்மானித்து முடிவு எடுக்கும் ஆற்றலை, ஒவ்வொருவரும் தம்முள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.



எந்தவொரு நிலையிலும் மற்றவர்களைச் சார்ந்திருப்பது எப்போதும் நமக்கு நன்மையளிப்பதாக இருக்காது. ஏனெனில், எப்போதும் எம்மைப் பற்றி நன்கறிந்தவர்களாக நாமே இருப்போம். ஆகவே, எமது தேவைகளுக்கேற்ப, சுயமுடிவை எடுப்பதற்குத் தேவையான சிறந்த ஆற்றலை நம்முள் வளர்க்க வேண்டும். அதற்காக, சிறந்த கல்வியைப் பெற வேண்டும்.

கல்வியானது, வாழ்க்கையின் பிரதான கூறாக இருக்கின்றது. அந்தவகையில், கல்வியில் நாம் சிறந்த நிலையை அடைதல் என்பது வாழ்க்கையில் நாம் அடைந்த ஒரு வெற்றியின் அடையாளமாகும். எனவே, அவ்வாறான பெறுமதியான கல்வியை நாம் கற்காமல், நேரத்தையும் காலத்தையும் வீணடித்து வாழ்வதென்பது நம்மை நாமே சீரழித்துக்கொள்வது போன்றதாகும். எத்தனையோ மாணவர்கள் இதனை சிந்தையில் கொள்ளாமலும் பாடசாலைக்குத் தொடர்ந்து செல்லாமலும் கற்றலை மேற்கொள்ளாமலும் இருக்கின்றனர். இது தமக்குத்தாமே கேடை விளைவிக்கும் செயலாகும். எனவே, மாணவர்கள் எப்போதும் கல்வியை மிகச் சிறப்பாகக் கற்று, வாழ்க்கையில் முன்னேற தொடர்ச்சியாக முயற்சிக்க வேண்டும். ஏனெனில், உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளிலேயே உள்ளது.

அத்துடன், இன்றைய யுகத்தைப் பொறுத்தவரை, நாம் இயற்கையோடு வாழ்வதைவிட, செயற்கையான விடயங்களோடுதான் எமது பொழுதை அதிக நேரம் கழித்துக்கொண்டு இருக்கின்றோம். இதில் இணையம், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம். நாம் எப்போதாவது, இயற்கையான இடத்திற்குச் சென்று, சுத்தமான காற்றை சுவாசித்து அமைதியைத் தேடி இருக்கின்றோமா? அல்லது தியானம், உடற்பயிற்சி போன்ற மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றோமா?



உண்மையில் இவையெல்லாம் எமது உடலுக்கும் மனதிற்கும் மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கக்கூடியவையாகும். அமைதியைத் தந்து, எமது சிந்தனைகளை அழகுபடுத்தக்கூடியவை. எனவே, இயற்கையை ரசிப்பதிலும் அதனூடாக, புதிய விடயங்களைக் கற்பதிலும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதிலும் நாம் அக்கறை காட்ட வேண்டும். அதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். அது சிறந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.



மேலும், எவற்றைத் தெரிவுசெய்து வாழ்க்கையை வாழ்வதாக இருந்தாலும் சரி; அவை நல்லவையாக இருக்க வேண்டும். மாறாக, தீயவற்றின் பக்கம் சாய்ந்து எம்மையும் எமது கல்வியையும் இன்பத்தையும் நாசமாக்கிக்கொள்ளக்கூடாது. ஏனெனில், இழந்த வாழ்வை மீண்டும் பெறுவது கடினம். ஆகவே, இறைவனால் எமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளை சிறப்பாக முகாமைத்துவம் செய்து, எமது கைகளில் தங்கியிருக்கும் எமது வாழ்க்கையை சிறப்பாக வாழ ஒவ்வொருவரும் இன்றே முயற்சி செய்வோம்!

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தகங்களைப் பாதுகாக்க

பொது அமைப்புகள், நிறுவனங்கள் அல்லது தனி நபர்களால் உருவாக்கப்பட்டு, பேணப்படுகின்ற தகவல் மூலங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பகம் நூலகம் எனப்படுகின்றது. தற்போது மரபு ரீதியாக இதனை 'நூல்களின் சேமிப்பகம்' என்றும் கூறலாம். நூல்களையும் வேறு ஆதாரங்களையும் சேவைகளையும் சொந்தமாக, தமக்கென வாங்க விரும்பாத, வாங்க முடியாத அல்லது ஆய்வுகளுக்காக தொழில்முறை உதவி தேவைப்படும் மக்கள், நூலகங்களைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். அதன்படி, தற்போது உலக நாடுகளில் பாரிய மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய நூலகங்கள் பலவும் உள்ளன.

வாசிப்பும் அறிவும் வளர்ச்சியுறக் காரணமான இந்த நூலகத்தின் வரலாறு மிக நீண்டதாகும்.

## நூலக வரலாறு

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த மக்கள் களிமண் தகடுகளில் எழுதி அதனை சூளைகளில் இட்டு, சுட்டு கோயில் மற்றும் அரண்மனைகளில் பாதுகாத்தும் வந்தனர். இவை தனித்தனி ஒடுகளாக துறைவாரியாகப் பேணப்பட்டும் வந்தன. இதுவே நூலகத் தோற்றத்தின் முன்னோடி எனக் கூறலாம். அதன்பின்னர் ஆராய்ச்சிகளின்போது, கண்டறிந்த தகவல்களை சேமித்து, பாதுகாத்து வைப்பதற்காகவே உலகின் முதல் நூல் நிலையம் உருவாகியது. அதுவே புராதன 'எஸ்ஸிரியா' எனும் தற்போதைய ஈராக்கில் அமையப்பெற்ற எஷீர் பெனிபல்' எனும் நூலகமாகும். எஷீர்பெனிபல் என்ற சக்கரவர்த்தியே இந்த நூலகத்தை நிர்மாணித்தவராவார். அதன்பின்னர் எகிப்தியர்களால் பெபிரஸ் தாளில் எழுதப்பட்ட ஆவணக் குறிப்புகளும் அந்நூலகத்தில் வைக்கப்பட்டன.

## உலகின் பழம்பெரும் நூலகம்

உலகின் மிகப் பழைய நூலகமாக 'அலெக்ஸ்ஸாண்ட்ரிய' நூலகமே கருதப்படுகின்றது. கிமு. 307 ஆம் ஆண்டு தொலமி அரசர்களால் கட்டப்பட்ட இந்த நூலகத்தைக்காண வெளிநாட்டவர்களும் வருகை தந்ததாகக் கூறப்படுகின்றது.

இங்கு மொழி பெயர்ப்பாளர்களும் இருந்துள்ளனர். இந்த நூலகத்தில் பெபிரஸ் ஆவணச் சுருள்கள் ஏழு வகைகளில் வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

## இலங்கையில் நூலகம்

உலகின் பல நாடுகளில் இருந்ததைப் போன்று இலங்கையிலும் முற்காலம் தொடக்கம் நூலகங்கள் இருந்திருக்கின்றன. பௌத்த விகாரைகளில் அமையப்பெற்றிருந்த இந்த நூலகங்களுக் கும் நீண்ட வரலாறு காணப்படுகின்றது. இது கி.மு. முதலாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதுடன், அக்கால ஆவணங்கள் சுவடிக் குறிப்புக்கள் மற்றும் வெற்றுத் தாள்களிலும் எழுதப்பட்டன. அநுராதபுர ஆட்சிகாலத்தில் அபயகிரி விகாரையில் அமைந்திருந்த நூலகம் மூலம் பயன் பெறுவதற்கென இந்தியா வியட்நாம், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்தோரும் வருகை தந்ததற்கான சான்றுகளும் உள்ளன. அவ்வாறே வட இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமையப்பெற்றுள்ள யாழ். நூலகம் கூட ஆசியாவிலேயே சிறந்தவொரு நூலகம் என்ற பெருமையைப் பெற்ற நூலகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இலங்கையின் முதல் நூலகம்

அச்சுத் தொழிற்துறையின் முன்னேற்றம் உலகின் ஏனைய நாடுகளில் இருந்ததைப்போன்றே இலங்கையிலும் காணப்பட்டது. அதனால்தான் ஏராளமான புத்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிடப்பட்டன. பின்னர் அவற்றை பாதுகாப்பதற்கு உரிய இடமும் அமைக்கப்பட்டது. அந்தவகையில்தான் 1870 ஆம் ஆண்டு அதாவது, ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி புரிந்தபோது, கட்டப்பட்ட கிழக்குலக நூலகம் இந்நாட்டின் ஆரம்ப நூலகம் எனக் கருதப்படுகின்றது. பின்னர் 1877 ஆம் ஆண்டு அது 'நூதனசாலை நூலகம்' எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இதுவே, தற்போது இலங்கையில் காணப்படும் மிகப் பெரும் நூலகமாகும்.

## பலரக நூலகங்கள்

தற்போது உள்நாட்டு-வெளிநாட்டு ரீதியில் நூல் நிலையங்கள் பல ரகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவை யாவன;

* **பாடசாலை நூலகம்:** மாணவ, மாணவியருக்கென பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருப்பது.
* **பொது நூலகம்:** சமூகத்திலுள்ள பலதரப்பினரும் தகவல்களை அறிந்துகொள்வதற்கென பொதுவாக அமைக்கப்படும் நூலகமாகும். இங்கு வயது வித்தியாசமின்றி, நூல்களை வாசிக்கலாம். 20 ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகங்கள் உள்ளூராட்சி நிர்வாகத்தின்கீழ் இயங்குகின்றன.
* **சர்வகலாசாலை நூலகம்:** இது சர்வகலாசாலைக்கு அருகில் அல்லது உயர்கல்லூரிக்கு அருகில் அமைக்கப்பட்டிருப்பதாகும். இதனையே, உயர்ரக நூலகமாகக் கருதுகின்றனர். இந்த நூலகத்தை சர்வகலாசாலை மாணவ, மாணவியர் பார்வையிடுவதற்கென்றே அமைத்துள்ளனர்.
* **விசேட நூலகம்:** முக்கியமான சில விடயங்களுக்காக, ஏதாவதொரு நிறுவனத்தினால் அமைக்கப்பட்டிருக்கும் நூலகமாகும். இது பிரதானமாக அந்நிறுவனத்தின் நோக்கத்தையே நிறைவேற்றும். அத்துடன், குறிப்பிட்ட விடயத்தை மட்டுமே திரட்டி வைக்கும். எனவே, இந்த நூலகத்தில் உள்ள விடயங்கள் சகலருக்கும் அன்றி தேவைப்பட்டோருக்கு மட்டுமே பயன்பெறும்.

## நூலக புத்தகத்தில் அறியாத விடயம்

நூலகம் ஒன்றிலிருந்து புத்தகத்தைப் பெற்றுக்கொள்வதிலும் திருப்பிக் கையளிப்பதிலும் அங்கத்தவருக்கு பிரச்சினை இல்லாவிடினும், அதனை நூலகத்திலிருந்து எடுக்குமுன் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகளும் உள்ளன. அதுவே புத்தகத்தின் பின்புறம் விளங்காமலிருக்கும் அடையாளத்தை அறிவதாகும். இது நமது நாட்டில் மட்டுமல்ல; ஏனைய நாடுகளிலும் உண்டு. இதுபற்றி தெளிவு உள்ளவர்கள் உலகின் எந்த நூல் நிலையத்திலும் பயன்பெறுவது இலகுவானதாகும்.

## புத்தகத்தைத் தேர்ந்தெடுத்தல்

ஒரு நூலகத்தின் பெறுமதிமிக்க சொத்து அங்குள்ள புத்தகங்கள்தான். எனவே, அங்கு புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கையில் நுட்பமாகச் செயற்பட வேண்டும். தேவைக்கேற்பவும் ரசனைக்கேற்பவும் புத்தகங்களை தேர்ந்தெடுக்க வேண்டும். அங்கு வரும் பலதரப்பட்டவரினதும் அபிலாஷைகளை ஈடுசெய்வதாகவும் அமைதல்வேண்டும். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சர்வகலாசாலைகள் என பல விடயதானங்கள் காணப்படுகின்றன. அவ்வாறே, பொது நூலகங்களிலும் புத்தகங்கள் காணப்படுகின்றன. பொது நூலகங்களிலும் புத்தகங்கள் தரம் பிரிக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அதற்கேற்ப, நாம் புத்தகங்களை எடுத்து வாசித்தல் இலகுவாக அமையும்.

## புத்தகங்களை அட்டவணைப்படுத்தல்

நூலகத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்படும் சகல புத்தகங்களும் அட்டவணைப்படுத்தப்பட்டு, பதிவீட்டுக் காப்பு ஏட்டில் அவை குறிக்கப்படுகின்றன. அது நூலகத்தின் அடிப்படை வைத்திருப்பாகும். நூலகத்திற்கு வரும் புத்தகங்கள் மட்டுமன்றி நூலகத்திலிருந்து அகற்றப்படும் புத்தகங்கள்கூட, அந்த பதிவீட்டுக்காப்பு ஏட்டிலேயே குறிக்கப்படுகின்றன. ஒரு நூலகத்தில் தமிழ், ஆங்கிலம்,



அலெக்ஸாண்ட்ரியா நூலகம்



நூல் நிலையத்தின் உட்புறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடயதானங்களின்படி, அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள்

# ம் நூலகங்கள்

சில நிர்வாகப் பிரிவுகள் உள்ளன.

புத்தகம் வழங்கும் பிரிவு,விமர்சனப் பிரிவு (கேள்வி வார இதழ் பிரிவு), பத்திரிகைப் பிரிவு, விசேட திரட்டுப் பிரிவு, பரிசீலனைப் பிரிவு,செவிப்புல னற்றோர் பிரிவு.

## புத்தக விபரக்கோவை

நூலகங்களில் உள்ள

சிங்களம் ஆகிய மும்மொழிகளிலுமான பல்வேறு வித நூல்கள் காணப்படுகின்றன. அடிக்கட்டு தாள்கள் கழன்றுவிடாமல் இருப்பதற்காக, கனத்த அட்டையால் அடிப்பக்கத்தை இறுக்கி அமைப்பதே அடிக்கட்டாகும். வாசகர் கைகளுக்குப் புத்தகம் செல்லும் முன்னரே, இவ்வாறு ஒவ்வொரு புத்தகத்திற்கும் அடிக்கட்டு இடப்படுகின்றது. இது புத்தகத்தின் நீண்டகால பாவனைக்கு உதவுகின்றது. புத்தகம் கைக்குக் கை மாறும்போது, விரைவில் சிதைந்து தாள்கள் கழன்று கிழிந்து போகாமல், இருப்பதற்காகவே இவ்வாறான அடிக்கட்டு அவயமாகின்றது.

## புத்தகங்களை வகைப்படுத்தல்

புத்தகங்களை துறைவாரியாக, பகுதி பகுதியாகப் பிரித்தல் புத்தக வகைப்படுத்தல் எனப்படுகின்றது. நூலக விதிப்படி, புத்தகங்கள் அறைவாரியாகப் பிரிக்கப்பட்டு, இலக்கங்களும் இடப்படுகின்றன. அதன்படி, ஒவ்வொரு விடயத்திற்கும் அதனைக் குறிப்பதற்கென தனித்தனியான இலக்கங்கள் இடப்படுகின்றன.

## நூல் நிலையத்துக்கான பிரிவுகள்

தரமான அமைப்பு, கூடிய வாசகர்கள், அதிக உறுப்பினர்கள் அமைந்த நூலகங்களில்


அம்சமாக புத்தக விபரக்கோவை கருதப்படுகினறன. எவ்வெவ் புத்தகங்கள் எந்தெந்த இடத்தில் இருக்கிறதென்பதை சுருக்கமாக குறிப்பிட்டு, இலக்கமிடப்பட்டு அதற்கென்று உள்ள அலுமாரிகளும் வைக்கப்படுகின்றது. அந்த அடுக்கினை பார்வையிட்டால், எமக்குத் தேவையான புத்தகங்கள் எங்கிருக்கிறது என்பதை இலகுவாகச் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே, நூலகம் ஒன்றிற்கு புத்தக விபரக்கோவை மிகவும் முக்கியமானதாகும்.

## வாசகர்களின் பொறுப்பு

நூலகத்தைப் பயன்படுத்துகையில் வாசகர்கள் சில விடயங்களைக் கையாள வேண்டும். அவையாவன;

- புத்தகங்களைக் கவனமாக உபயோகிக்க வேண்டும்.
- புத்தகங்களை சுத்தமாக வைத்திருத்தல் அவசியமாகும்
- புத்தகங்களைக் கிழிக்காமலும் மடிக்காமலும் மீள கையளிக்க வேண்டும்
- புத்தகங்களை உரிய இடத்தில் வைத்திருத்தல்
- நூலகத்திற்குள் சத்தம் போடாதிருத்தல்

**ஏ.ஜே.எம்.நிழாம்**



புத்தகத்துக்கு அடிக்கட்டுதல்





யாழ் நூலகம்

# புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் திறன் கொண்ட நாய்கள்



இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே கண்டுபிடிப்பதில் அதீத ஆற்றல் விலங்கினங்களுக்கு உண்டு என பல ஆய்வாளர்கள் ஆதாரங்களை முன் வைத்துக்கொண்டிருக்கும் வேளையில் இன்னுமொரு விசித்திர தகவல் ஜப்பானில் இருந்து வெளிவந்துள்ளது. இன்று உலகில் மனித சமுதாயத்தை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்றாகிய புற்றுநோயை முன்கூட்டியே கண்டுபிடிக்கும் ஆற்றல் நாய்களுக்கு உண்டு என்பதே, அந்த விசித்திரமான தகவலாகும்.

வயிற்றிலும் வயிற்றைச் சூழவுள்ள பகுதியிலும் புற்றுநோய் ஏற்படும் பட்சத்தில் அதனை முன்கூட்டியே கண்டுபிடிக்கும் ஆற்றல் நாய்களுக்கு உண்டென ஜப்பான் ஆய்வுக்குழு ஒன்றினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளுக்கிடையில் பிராண வாயுவின் பகுதி மற்றும் மலத்தின் பகுதியை மோப்பம் பிடித்து முன்கூட்டியே புற்றுநோய் வருவதற்குரிய நிலையைக் கண்டுபிடிப்பதில் 'லெப்றடோர் ரிட்ரிவர்' வகையைச் சேர்ந்த நாய்கள் விசேட திறமை வாய்ந்தவை என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## லெப்றடோர் ரிட்ரிவர் நாய்கள்

எட்டு வயது நிரம்பிய கறுப்புநிற 'லெப்றடோர் ரிட்ரிவர்' வகையைச் சேர்ந்த 'மெரின்' எனும் நாய்க்கு புற்றுநோயாளிகளினதும் ஆரோக்கியமான நபர்கள் நால்வரினதும் உடலின் பகுதிகளைப் பெற்று அவற்றை மோப்பம் பிடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பம் ஒருமுறை, இருமுறை அல்ல 36 முறைகள் வழங்கப்பட்டன. அதில் 33 தடவைகள் புற்றுநோயாளர்களின் உடற்பகுதிகளை மாத்திரம் மெரின் எனும் அந்த நாய் மோப்பம் பிடித்து அடையாளம் காட்டியது.

## தனித்துவமான ஆற்றல்

ஒவ்வொரு புற்றுநோய் வகைகளுக்கும் தனித்துவமான மணம் (துர்மணம்) உண்டு எனவும், எனினும், அதன் ரசாயனத் தொகுதி எவை என தெளிவு இல்லை என்றும் மேலும் தெரிவித்த ஆய்வாளர்கள் நாய்களிடம் அந்த ஆற்றல் அதாவது, புற்றுநோய் வகைகளுக்கான தனித்துவமான மணத்தைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் உண்டு என குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையில், நாய்கள் தமது மூக்கையும் மோப்ப சக்தியையும் பயன்படுத்தி சிறுநீரகம், தோல், நுரையீரல், மார்பு, மார்பைச் சூழவுள்ள உறுப்புகள், சமிபாட்டுத் தொகுதி உறுப்புகள் என்பனவற்றில் ஏற்படும் புற்றுநோய் குறித்து முன்கூட்டியே கண்டுபிடிக்கும் ஆற்றல் இருக்க வாய்ப்புண்டு என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## மாற்றுக் கருத்து

மேலும், புற்றுநோய் குறித்த ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டுவரும் பிரித்தானிய ஆய்வுக்குழுக்களோ, மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளன. புற்றுநோயை கண்டுபிடிப்பதற்கு நாய்களைப் பயன்படுத்துவது நடைமுறைச் சாத்தியமில்லை என்பது அவர்களின் கருத்தாகும்.

## புற்றுநோயால் பிரித்தானியர் அவதி

இதற்கிடையில் புற்றுநோயால் பாதிக்கப்படும் ஐரோப்பிய நாடுகளில் பிரித்தானியா முன்னணி வகிப்பதாக ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. குறிப்பாக, வயிறு மற்றும் வயிற்றைச் சூழவுள்ள உறுப்புகளிலேயே, பிரித்தானியாவில் அதிகமானோர் அவதிப்படுவதாகவும் அந்த அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன. இருபது பிரித்தானியர்களில் ஒருவர் வீதம் தமது வாழ்நாளில் வயிறு சம்பந்தமான புற்றுநோயால் பாதிக்கப்படுவதாகவும் வருடம் ஒன்றிற்கு 16,000 பேருக்கும் அதிகமானோர் வயிற்றுப் புற்றுநோயால் இறப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது, நாய்களின் மூக்கிற்கும் அதன் மோப்ப சக்திக்கும் நிகரான விஞ்ஞான ரீதியான மூக்கை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நவீன தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

**ஜெய்கர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெனிசுவெலா

**அரசு:** இரு சட்ட சபைகள்கொண்ட பல கட்சிக் கூட்டுக் குடியரசு.
**சுதந்திரம்:** ஸ்பெய்னிடமிருந்து சுதந்திரம்- 1811 ஜூலை 50 நாள்; கிரேட்டர் கொலம்பியாவிடமிருந்து சுதந்திரம்- 1830 ஜனவரி 13; சுதந்திரத்தின் அங்கீகாரம் - 1845 மார்ச் 30; நிகழ்கால அரசியலமைப்பு - 1999 டிசம்பர் 20.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா பொலிவாரினா டி வெனிசுவெலா.
**ஜனாதிபதி** (1999): ஹியுகோ சாவேஸ்.
**உப ஜனாதிபதி** (1999): எலியாஸ் ஜலூவா.


ஜனாதிபதி


வெனிசுவெலா நாடாளுமன்றம் (கெபிடோலியோ)


தலைநகரின் ஒரு பகுதி

## புவியியல்

தென் அமெரிக்காவின் வடக்கில் அமைந்துள்ளது. கரீபியன் கடலில் கடற்கரையைக் கொண்டுள்ளது. இதன் மேற்கிலும் தெற்கிலும் கொலம்பியா நாடு அமைந்துள்ளது. கிழக்கில் கயானாவும் கிழக்கு மற்றும் தெற்கில் பிரேசிலும் எல்லைகளாக அமைந்துள்ளன. ஒரினோகோ நதியும் வெனிசுவெலாவின் மலைத்தொடர்களும் அந்நாட்டை நான்கு வேறுபட்ட பிராந்தியங்களாகப் பிரிக்கின்றன. உலகின் மிக உயரமான ஏஞ்சல் நீர்வீழ்ச்சியானது இங்குள்ள கயானா உயர் நிலத்திலிருந்து பாய்கின்றது. இது 2,421 அடி உயரமானது. 10,000 இற்கும் மேற்பட்ட நதிகளைக் கொண்ட வெனிசுவெலாவில் ஒரினோகோ நதி மிக முக்கிய நதியாகும். கூரி மற்றும் மரகாய்போ உள்ளிட்ட பல ஏரிகள் இங்குண்டு. தென் அமெரிக்காவிலேயே மிகப் பெரிய ஏரி மரகாய்போ ஆகும்.

**மொத்தப்பரப்பு:** 352, 144 ச.மைல் (912,050 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 340,560 ச.மைல் (882, 050 ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 23 மாநிலங்கள், 2 சுயாட்சி மாவட்டம் மற்றும் 1 சுயாட்சி பகுதி.
**தலைநகரம்:** கராகஸ்.
**பெரிய நகரங்கள்:** வெலன்சியா, மரகாய்போ, பார்கியூனி-மெட்டோ.
**மக்கள் தொகை:** 27,233, 228. **நாணயம்:** பொலிவர்.
**உயர் மலைச்சிகரம்:** பீகோ பொலிவர் (5007 மீற்றர்).
**தாழ்மையம்:** கரீபியன் கடல்.
**மொழிகள்:** ஸ்பெனிஷ் (உத்தியோகபூர்வமொழி), உள்ளூர் பேச்சுமொழிகள்.
**இனக்குழுவினர்கள்:** ஸ்பானியர், இத்தாலியர், போர்த்துக்கேயர், அரேபியர், ஜேர்மனியர், ஆபிரிக்கர், உள்ளூர் பூர்வீக மக்கள்.
**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 96%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 2%.
**எழுத்தறிவு** (2003): 93% **இணையத்தளக் குறியீடு:** .ve
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +58


உப ஜனாதிபதி

**தேசிய கீதம்**

Gloria al bravo pueblo
que el yugo lanzó,
la Ley respetando
la virtud y honor....என ஆரம்பமாகின்றது.


ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (உலகின் உயரமான நீர்வீழ்ச்சி)

## வரலாறு

கொலம்பஸ் தனது மூன்றாவது பயணத்தின் விளைவாக, 1498 இல் வெனிசுவெலாவைக் கண்டுபிடித்தார். அப்போது அங்கு ஏற்கனவே அராவக், கரீப் மற்றும் சிப்சா இந்தியர்கள் குடியேறியிருந்தனர். 1567 இல் இன்றைய தலைநகர் கராகஸ் கண்டுபிடிக்கப்பட்டது.லத்தீன் அமெரிக்க சுதந்திரப் போராட்ட தலைவர் பொலிவரின் முயற்சியால், தென் அமெரிக்க குடியேற்ற நாடுகளிலேயே (காலனித்துவ நாடுகளில்) முதன்முதலாக சுதந்திரம் பெற்ற பெருமையை வெனிசுவெலா பெறுகிறது. 1811 இல் சுதந்திரம் பெற்ற இந்நாடு, கிரேட்டர் கொலம்பிய பேரரசின் ஒரு சுயாட்சி அங்கமாக திகழ்ந்தது. பின்னர் 1830 இல் குடியரசானது.

1908 முதல் 1935 வரை ஆட்சிபுரிந்த ஜெனரல் ஜூவான் வின்சன்ட் கோமஸ் காலத்தில் வெனிசுவெலா ஒரு பெரும் பெற்றோலிய ஏற்றுமதி நாடாக மாறியது. அவரின் மறைவின் பின், ராணுவ ஆட்சி நிலவியது. பின்னர், இடதுசாரியான கலாநிதி ரொமூலோ பெட்டன்கோர்ட்டின் ஜனநாயக நடவடிக்கைக் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று, 1946 இல் புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. 1969 முதல் 1974 வரை நாட்டில் ஆட்சிசெய்த கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோவுடனான உறவைப் பேண ஆரம்பித்தது. 1998 இல் ஜனாதிபதியாக தேர்வான ஹியுகோ சாவேஸ் அன்றிலிருந்து இன்றுவரை ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார்.


தேசிய இலச்சினை




## காலநிலை

பொதுவாகவே, வெனிசுவெலா வெப்பக் காலநிலையைக் கொண்ட ஒரு நாடாகும். ஜூன் முதல் ஒக்டோபர் வரை மழைப்பருவமாகும். நொவெம்பர் முதல் மே வரை உலர் காலநிலை நிலவும். மே முதல் செப்டெம்பர் வரை அதிகூடிய வெப்பநிலை நிலவும்.

## கலாசாரம்

பூர்வீக அமெரிக்க இந்தியர்களின் கலாசாரத் தாக்கங்கள் இன்றும் நிலவுவதோடு; ஸ்பானிய, ஆபிரிக்க கலாசாரத் தாக்கங்களும் பெருமளவில் காணப்படுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் இத்தாலிய, போர்த்துக்கேய, அரேபிய, ஜேர்மனிய மற்றும் யூத கலாசாரத் தாக்கங்கள் இங்கு தோன்றியுள்ளன.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்- 4.216 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 12.496 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 201, FM(இவற்றில் 20 கராகஸில் உள்ளன), SW 11. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 66. **இணையத்தள வழங்குனர்கள்** (2006): 51.968; இணையத்தளப் பாவனையாளர்கள்: 3.04 மில்லியன்.


பிரான்ஸ் சதுக்கம்

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 682 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 96,155 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து:** 7,100 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** அமுயே, பாஜோ கிரேன்ட், எல் டெப்லெஸோ லா குயேரா, லா சாலினா, மரகாய்போ உட்பட, மேலும் பல. **விமான நிலையங்கள்** (2006): 375.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 3%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், வாழை, காய்கறிகள், கோப்பி, இறைச்சி, பன்றி இறைச்சி, பால், முட்டை, மீன். **கைத்தொழில்கள்:** பெற்றோலியம், கட்டடப்பொருட்கள், உணவு உற்பத்திப் பொருட்கள், புடவை வகைகள். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், கனிப்பொருட்கள், நீர்மின்வலு, வைரக்கற்கள். **ஏற்றுமதிகள்** (2009): பெற்றோலியம், விவசாய உற்பத்திப் பொருட்கள், அடிப்படைக் கைத்தொழில் பொருட்கள். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும், போக்குவரத்து சாதனங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, அன்டில்ஸ், டொமினிக்கன் குடியரசு, கொலம்பியா, பிரேசில், மெக்ஸிக்கோ.




சைமன் பொலிவர் பிறந்த இடம்

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ ஏஞ்சல் நீர்வீழ்ச்சி ✱ ஈஸ்ட் பார்க்
✱ ஹீரோஸ் வோல்க் ✱ பிரான்ஸ் சதுக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூவுலகின் மீட்பர் புவிதனில் பிறந்தார்

*கிறிஸ்தவ மத நம்பிக்கையின்படி, இற்றைக்கு சுமார் 2011 வருடங்களுக்கு முன்னர் உலக மீட்பராம் ரட்சகர் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தோன்றினார். 'புவியின் அரசன்' என்றும் 'யூதர்களின் ராஜா' என்றும் போற்றப்பட்ட கிறிஸ்துவோ, மாட மாளிகையிலும் வான் எட்டும் கோபுரத்திலும் பிறக்கவில்லை. மாறாக, மனிதனை பாவத்திலிருந்து மீட்க மாட்டுத் தொழுவத்தில் ஏழைக் குழந்தையாக அவதரித்தார். டிசம்பர் 25 ஆம் திகதி மத்திய கிழக்கிலுள்ள பெத்லகேம் எனும் ஊரில் யோசேப் என்பவருக்கும் கன்னி மரியாளுக்கும் மகனாக இயேசு இப்பூவுலகில் அவதரித்தார். அவரின் பிறப்பைக் கொண்டாடும் நன்னாளே நத்தார் பண்டிகையாகும். இதனைக் கிறிஸ்மஸ் பண்டிகை என்றும் கூறுவர்*

## முக்கியத்துவம் மிக்க வரலாறு

கிறிஸ்தவர்களால் 'இறைமகன்' என வர்ணிக்கப்படும் இயேசு கிறிஸ்து, கிறிஸ்தவ மத தோன்றலிலும் அடிப்படைப் போதனைகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றார். கிறிஸ்தவம் (Christianity) என்ற பெயரே இயேசு கிறிஸ்து (Jesus Christ) என்ற பதத்திலிருந்துதான் வந்தது. 2000 வருடங்களுக்கு முன்பு மிகவும் பலம் பொருந்திய அரசாக விளங்கிய பரிசுத்த ரோமப் பேரரசின் ஆதிக்கம் ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா என பாரிய பிரதேசம் எங்கும் தழைத்தோங்கியது. ரோமர்கள் அமுல்படுத்திய சனத்தொகை கணிப்பீட்டுக்காக, தமது பூர்வீக ஊரான பெத்லகேமிற்கு இயேசுவின் பெற்றோராகிய யோசேப்பும் மரியாளும் செல்கின்றனர். அங்கே அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடம் ஒன்று கிடைக்காததால் ஒரு மாட்டுத் தொழுவத்தில் தங்குகின்றனர். அந்நாளிலேயே, இறையருளால் கருவுற்றிருந்த மரியாளுக்கு இயேசு மகனாய் பிறக்கின்றார்.

இயேசு கிறிஸ்து பிறந்த இடம் எதிர்பாராதது. ஆனால், அவரது பிறப்பு எதிர்பாராதது அல்ல. அவர் பிறப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, பல தீர்க்கதரிசிகளால் அவரது பிறப்புக் குறித்து மறைமுகமாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவரின் பிறப்பை அறிந்து அவரைத் தரிசிக்க மூன்று மன்னர்கள் உலகின் வெவ்வேறு திசைகளில் இருந்து வந்தனர். ஆனால், இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மகிமையை அறியாத அக்கால மன்னனாகிய ஏரோது தனக்குப் போட்டியாக மன்னர் ஒருவர் பிறந்திருக்கிறார் என தவறாக நினைத்து, அந்நாட்டில் உள்ள இரண்டு வயதிட்குட் பட்ட சகல ஆண் குழந் தைகளையும் கொல் லும்படி கட்டளை இட்டான். ஏரோது விதித்த உத்தர வையும் மீறி, உயிர் பிழைத்து மீண்டும் வீடு திரும்பிய இயேசு கிறிஸ்து, பின்னாளில் பெரும் புரட்சிகளைச் செய்தார்.



மார்கழியின் இதமான குளிர், வீதியெங்கும் அலங்கரிப்பு, வீடுதோறும் உற்சாகம், மனதில் கரைபுரண்டோடும் இனம்புரியாத குதூகல உணர்வு! ஆம் நத்தார் வந்துவிட்டது!

ஆனால், அவரது புரட்சிகளில் ஆயுதங்கள் இல்லை! வசைச் சொற்கள் இல்லை! அன்பும் அரவணைப்புமே நிறைந்திருந்தது. இன்றைய உலகில் அதிக மக்களால் பின்பற்றப்படும் மதமாக கிறிஸ்தவம் திகழக் காரணம் அவரது பிறப்பு, வாழ்க்கை மற்றும் போதனைகளுமே ஆகும்.

## நத்தார் உணர்த்துவது

பொதுவாக, அனைத்துப் பண்டிகையும் கொண்டாடுவதற்கு சில காரணங்களும் நோக்கங்களும் உள்ளன. நத்தாரும் அப்படியே. பாவத்திலிருந்து மீளவும் மன்னிப்புப் பெறவும் நல்வழி செல்லவும் கிறிஸ்து மனித சமுதாயத்தை வழிநடத்தினார். ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் ஒதுக்கப்பட்டோருக்குமே தம் வாழ்வில் முன்னுரிமை கொடுத்தார். அவர்களை மதிக்கவும் அவர்கள் மீது இரக்கம் காட்டவும் அவர்களின் சுகதுக்கங்களில் பங்கெடுக்கவும் உதவி செய்யவும் வல்லவராகிய இயேசு எமக்குக் கற்றுத் தந்தார். உண்மையான இறைவன் ஒவ்வொரு மனிதனதும் உள்ளத்தில் உதயமாக வேண்டும் என்றும் உண்மையான சமாதானம் நாட்டிலும் வீட்டிலும் ஏன் முழு உலகிலும் உதிக்க வேண்டும் என்றும் போதித்தார். கிறிஸ்துவின் தூய்மையான வாழ்க்கையும் அவர் மக்களின் மனமாற்றத்திற்காக ஆற்றிய உரைகளும் இவ்வுலகின் மீட்பிற்கு அடித்தளமாக அமைகின்றன என்பதே கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.

கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் எனும் நன்நாள் வெறுமனே கொண்டாட்டம் நிறைந்த நாளல்ல; உலக ரட்சிப்பிற்கான ஆன்மீக மாற்றத்தின் ஆரம்ப நாளாகவே எண்ணி, அர்த்தமுள்ள ஒரு மாபெரும் பெருநாளாகவே கொண்டாட வேண்டும் என்பதே உண்மையான கிறிஸ்தவ உலகின் எதிர்பார்ப்பாகும். அவரது பிறப்பினைக் கொண்டாடும் வேளையில் நாமும் எமது வாழ்வை அன்பும் சமாதானமும் நிறைந்தவொன்றாய் மாற்றுவோம். பிறரின் மகிழ்வில் அக்கறை கொள்வோம். நத்தாரைக் கொண்டாடுவதோடு, இனிய பல நற்பண்புகளையும் வளர்த்திடுவோம்!

**இரஞ்சித் ஜெயகர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I


பெயர்: .................................................. நேரம்: 45 நிமிடங்கள்

★ *1 தொடக்கம் 37 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.*

★ *1 ஆம், 2 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிகவும் நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின்கீழ்க் கோடிடுக.*

01) 


1. Aயும் Cயும் 2. Bயும் Dயும் 3. Dயும் Aயும்

02) 


1. Aயும் Cயும் 2. Bயும் Aயும் 3. Bயும் Dயும்

★ *கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையைக்கொண்டு 3 ஆம், 4 ஆம், 5 ஆம் வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவுசெய்க.*

**2 2 M 7 7 N L L 2 S N 2 A N 3 N R R 7 2 M R 7 N N 7 S S 7NN**

03) இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள இந்நிரையில் எத்தனை N எழுத்துக்கள் உள்ளன?

1. 10 2. 7 3. 8

04) இங்கு ஓர் இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகை எழுத்து காணப்படுகின்றது. அவ்வெழுத்து எது?

1. எழுத்து L 2. எழுத்து N 3. எழுத்து M

05) இங்குள்ள அனைத்து இலக்கங்களினதும் கூட்டுத்தொகை யாது?

1. 54 2. 55 3. 53

★ *6 ஆம், 7 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் பல்வேறு வடிவங்களையும் வெவ்வேறு இயல்புகளையும் கொண்ட பின்வரும் உருக்களைப் பயன்படுத்துக.*




06) ஒத்த இயல்புகள் உள்ள மூன்று உருக்களைக் காட்டும் விடையின்கீழ்க் கோடிடுக.

1. ABG 2. DHK 3. DHG

07) ஒத்த இயல்புகள் இல்லாத மூன்று உருக்களைக் காட்டும் விடையின்கீழ்க் கோடிடுக.

1. BFG 2. LKD 3. BCL

08)  பெட்டியிலுள்ள அப்பிள் பழங்களில் 3/5 பங்கு எத்தனை அப்பிள் பழங்கள்?

1. 9 2. 10. 3. 6

09) 6, 8, 9, 7 என்னும் இலக்கங்களால் ஆக்க முடியாத நான்கிலக்க எண் எது?

1. 9876 2. 6789 3. 8567

10) 


பென்சிலின் நீளம் யாது?

1. 2cm 2. 5cm 3. 4cm

11) பின்வரும் தசம எண்களை இறங்குவரிசையில் எழுதிய சரியான வரிசையைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1. 0.7, 0.6, 0.8, 0.5 2. 0.2, 0.3, 0.4, 0.5 3. 0.7, 0.6, 0.4, 0.2

★ *குறியீடுகளையும் இலக்கங்களையும் அவதானித்து, 12 ஆம், 13 ஆம், 14 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.*




12) ▽ இன் பெறுமானம் யாது?

1. 1 2. 3 3. 2

13) ⊙ இன் பெறுமதி யாது?

1. 3 2. 2 3. 1

14) ✡ இன் பெறுமதி யாது?

1. 2 2. 3 3. 1

15) பாடசாலை விழா ஒன்றிற்கான நிகழ்ச்சி நிரலின் விடயங்கள் சில மாற்றப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

A- அதிபர் உரை B- வரவேற்பு உரை C- நன்றி உரை
D- அதிதிகளின் வருகை E- பரிசில் வழங்கல் F- பிரதம அதிதியின் உரை

நிகழ்ச்சி நிரலின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1. BDCAEF 2. ACEFDB 3. DBAFEC




★ *எண்கோலத்தை அவதானித்து, 16 ஆம், 17 ஆம் வினாக்களின் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.*

16) [512] → [251], [316] → [631], [433] → [.........]

1. 343 2. 334 3. 433

17) [4583] → [5694] எனின் [7362] → [.........]

1. 6473 2. 8473 3. 8373

18)  இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 3 3. 5

★ *19 ஆம், 20 ஆம் வினாக்களிலுள்ள ஆங்கில எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் காட்டினால், அதே அமைப்பில் மாற்றமின்றித் தெரியும் எழுத்துக்களைக்கொண்ட விடையின்கீழ்க் கோடிடுக.*

19) TEACHER 1. REA 2. TCE 3. TAH

20) SAMPUR 1. SAU 2. AMU 3. AMR

★ *பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.*

21) நிகழ்வு: குமாரின் குண இயல்பை அவனின் ஒரு செயலால் அறியலாம்.

1. முயற்சி உடையோர் இகழ்ச்சியடையார்.
2. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
3. கண்டது கற்கப் பண்டிதனாவான்.

22) நிகழ்வு: நீந்தத் தெரியாத முரளி ஆற்றில் விழுந்தபோது, அவனின் நண்பன் சுரேஷ் ஓடி வந்து காப்பாற்றினான்.

1. ஆழமறியாது காலை விடாதே.
2. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.
3. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.

★ *பின்வரும் வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக்கொண்ட கூற்றைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.*

23) சிறுவர்களின் <u>எதிர்காலம்</u> அவர்களின் <u>ஆற்றலில்</u> தங்கியுள்ளது.

1. வருங்காலம், படிப்பு 2. வருங்காலம், திறன்
3. இறந்தகாலம், வெற்றி


24) பருமனின் ஒழுங்கு முறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை எது?

1. கிராமம், நாடு, மாவட்டம், மாகாணம், நகரம்
2. நாடு, மாவட்டம், மாகாணம், நகரம், கிராமம்
3. கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம், நாடு

25) பெறுமதியில் ஒழுங்கு முறைப்படி பொருட்களைக் காட்டும் விடை எது?

1. தங்கம் - இரும்பு - செம்பு - வெள்ளி
2. இரும்பு - செம்பு - வெள்ளி - தங்கம்
3. வெள்ளி - தங்கம் - இரும்பு - செம்பு


26) பின்வரும் கோலத்தைப் பாருங்கள்.



இக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உரு யாது?




★ *பின்வரும் வினாவில் முதலாவதாகத் தரப்பட்டுள்ள வடிவத்திற்குச் சமனாக அமையாத வடிவத்தை எதிரே தரப்பட்டுள்ள மூன்று வடிவங்களிலிருந்தும் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தின்கீழ்க் கோடிடுக.*

27) 


28) விளையாட்டுப் போட்டி ஒன்றில் நீலம், சிவப்பு, பச்சை , மஞ்சள் ஆகிய நிறக் கொடிகள் மைதானத்தில் இதே ஒழுங்கில் நடப்பட்டுள்ளன. 57 ஆவதாக நடப்பட்ட கொடியைத் தெரிவுசெய்க.

1. சிவப்பு 2. நீலம் 3. பச்சை


மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது... பா
# விடுமுறை



## விடுமுறையை அர்த்தமுள்ளதாகவும்




கற்றல் செய
ஆழ்மனதில்
படைப்புகளை
காலம் அரிய

*'பாடசாலை விடுமுறை' என்பது, மாணவர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சி தரும் காலமாகும். சில மாதங்களாக, தொடர்ச்சியான கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்கள், அதிலிருந்து சற்றே தம்மை விடுவித்துக்கொள்ளும் காலமிது. பாடசாலை விடுமுறையானது, உண்மையில் முற்று முழுதாக மாணவர்களின் நலன் கருதியே உலகின் அனைத்து நாடுகளிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றது*

மகிழ்ச்சி நிறைந்த இந்த விடுமுறைக் காலத்தில் தமது உடன்பிறந்தவர்களுடனும் அயலில் வசிக்கும் சிறார்களுடனும் பல்வேறு விளையாட்டுக்களை விளையாடி மகிழலாம் என மாணவர்கள் காத்திருப்பர். பொதுவாக, விளையாட்டு என்பது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். எனினும், அது முழுநேர விளையாட்டாக இருக்கலாகாது. 'ஒரு மாதம்' எனும்போது, அது 30 அல்லது 31 தினங்களைக் கொண்டது- 720 அல்லது 744 மணித்தியாலங்களைக் கொண்டது. ஆகவே, இத்தகைய நீண்டதொரு பொன்னான நேரத்தை விளையாடுவதற்கு மாத்திரம் நீங்கள் பயன்படுத்தினால், எந்தளவு நேரத்தை வீண்விரயம் செய்துள்ளீர்கள் என்பதை அந்தக் காலம் கழிந்த பின்னர்தான் நீங்கள் உணர்வீர்கள். அதனால்,விடுமுறையை எவ்வாறு அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் கழிப்பது என்பதில் சற்று எமது கவனத்தை செலுத்துவோம்.

### நேர அட்டவணை ஒன்றை தயார் செய்யுங்கள்

விடுமுறைக் காலத்தில் நாள்தோறும் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் எவை? என்பது குறித்து நேர அட்டவணை ஒன்றைத் தயார் செய்வது மிக முக்கியமானதாகும். நேர அட்டவணையை தயாரிக்கும் பொழுது, பாடம் படித்தல் (கற்றல்), விளையாடுதல், பெற்றோர்களுக்கு உதவுதல், உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லல், சுற்றுலா செல்லல், சமூகப் பணிகளில் தம்மை அர்ப்பணித்தல் உள்ளிட்ட பல பயனுள்ள விடயங்களுக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது உங்கள் விடுமுறைக்காலம் அர்த்தமுள்ள-பயனுள்ள விடுமுறையாகப் பரிணமிக்கும்.

### அதிகாலையில் எழும்புங்கள்

கல்வி கற்கும் நீங்கள் சிறுவயதில் இருந்தே பாடசாலை நாட்களில் அதிகாலையில் விழித்தெழ பழக்கப்பட்டிருப்பீர்கள். எனினும், விடுமுறைக் காலத்தில் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் மிகவும் தாமதித்தே எழும்புவர். ஆனால், பாடசாலை செல்லும் நாட்களைப் போன்றே, பாடசாலை செல்லாத நாட்களிலும் அதிகாலையிலேயே விழித் தெழும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பது மிகச் சிறந்ததாகும். ஏனெனில், விடுமுறைக் காலத்தில் தாமதித்து எழும் வழக்கத்தைக் கொண்டிருப்பீர்களேயானால், விடுமுறை கழிந்து மீண்டும் பாடசாலை செல்லவேண்டிய காலத்தில் மீண்டும் அதிகாலையில் எழுவது மிகவும் சிரமம் நிறைந்த காரியமாகவே மாறிவிடும்.



அதிகாலையிலேயே எழுந்திருங்கள்

### சுற்றுலா செல்லுங்கள்

விடுமுறைக் காலத்தில் உங்கள் குடும்பத்தினர்கள், உறவினர்களுடன் சுற்றுலா செல்வதற்கான காலத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். முடிந்தால் அரும்பொருட்காட்சியகம், கோள் மண்டலம், மிருகக்காட்சிசாலை போன்ற இடங்களையோ அல்லது அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற புராதன ராசதானிகளையோ பார்வையிடச் செல்லுங்கள். தவிர; சரணாலயங்கள், கைத்தொழிற்சாலைகள் உட்பட உங்கள் கல்விச் செயற்பாடுகளுடன் தொடர்புடையதும் சிறந்த முறையில் பயனுடையதாக விடுமுறையைக் கழிப்பதற்கும் ஏற்றவாறான இடங்களை தெரிவுசெய்யுங்கள்.




பாடங்களைக் கற்பதற்கும் நேரம் ஒதுக்குங்கள்

### புத்தாக்கங்களை உருவாக்குங்கள்

பாடசாலை நாட்களில் கற்றல் செயற்பாடுகளில் மூழ்கி இருந்த நீங்கள், ஆழ்மனதில் புதைத்து வைத்திருந்த சிறந்த படைப்புகளை வெளிக்கொண்டுவர இந்த விடுமுறைக்காலம் உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பமாகும். இக்காலகட்டத்தில் கவிதைகள் புனையலாம். கட்டுரைகள், சிறுகதைகள் எழுதலாம். அழகிய சித்திரங்களைத் தீட்டலாம். இவை தவிர, கழிவுப்பொருட்களில் குறைந்த செலவில் கைப்பணிப் பொருட்களையும் செய்யலாம். அல்லது நீங்கள் எந்த துறையில் ஆர்வங்கொண்டிருக்கின்றீர்களோ, அது சார்ந்த படைப்புகள், செயல்முறைகளில் ஈடுபடலாம். இவ்வாறு புதிய படைப்பொன்றைப் படைக்க இது நல்லதொரு சந்தர்ப்பமாகும். அத்துடன், சில தினங்களில் வரப்போகும் நத்தார் பண்டிகைக்கும் அதனைத் தொடர்ந்து மலரப்போகும் புத்தாண்டிற்கும் வாழ்த்துக்கூறி உங்கள் கைகளாலேயே விதவிதமான வாழ்த்து அட்டைகளை உருவாக்கி, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அனுப்பலாம். அது உங்களையும் அவர்களையும் நிச்சயம் மகிழ்ச்சிப்படுத்தும்.

### கற்றல் செயற்பாடுகளைக் கைவிட வேண்டாம்

பாடசாலை விடுமுறை முடிவடைவதற்கு முன்னர் ஆசிரியர்கள் உங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டசாலை ...க் காலம்!

## ...வும் பயனுள்ளதாகவும் கழிப்பதற்கு சில ஆலோசனைகள்


வீட்டு வேலைகளில் பெரியோர்களுக்கு உதவுங்கள்

**...செயற்பாடுகளில் மூழ்கி இருந்த நீங்கள் ...தில் புதைத்து வைத்திருந்த சிறந்த ...புகளை வெளிக்கொணர இந்த விடுமுறைக் ...அரியதொரு சந்தர்ப்பமாகும்**




நீங்கள் கற்றல் செயற்பாடுகளைக் கைவிடக்கூடாது என்பதற்காகத் தான் வீட்டு வேலைகள் கொடுக்கப்படுகின்றன. எனவே, பாடம் தொடர்பான வீட்டு வேலைகள் கொடுக்கப்படுவது உங்கள் நன்மைக்காகவே என்பதை மனதில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும்.

### மனநிலையில் மாற்றம்

விடுமுறைக் காலத்தை உங்கள் வீட்டில் அன்றி வேறெங்கேனும் கழிக்க விரும்பினால், உங்கள் பாட்டியின் அல்லது உங்கள் மேல் அன்பு செலுத்தும் உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று சில தினங்கள் அவர்களோடு தங்குங்கள். இதன் மூலம் உங்கள் மனநிலையில் நல்லதொரு மாற்றம் ஏற்படலாம். அவ்வாறு செல்லும்பொழுது, பாடசாலையில் உங்களுக்குக் கொடுத்த வீட்டு வேலைகளையும் உடன் எடுத்துச் செல்லுங்கள்.





வழங்கிய வீட்டு வேலைகளை செவ்வனே முடிப்பது உங்களின் கடமையாகும். எனினும், சில மாணவர்களோ, பாடசாலையில் வழங்கிய வீட்டு வேலைகளை விடுமுறை முடிவடைவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்புதான் புரட்டிப் பார்ப்பார்கள். அது அவ்வளவு நல்ல விடயமன்று. குறைந்த நாட்களுக்குள் அவசர அவசரமாக பாடம் தொடர்பான வீட்டு வேலைகளை செய்ய முற்படும்போது, அவற்றை உரிய முறையில் செய்து முடிக்க உங்களால் முடியாமல் போகலாம். அத்துடன், வீணாக மன அழுத்தத்திற்கும் உட்பட வேண்டி வரும். எனவே, பாடசாலையில் ஆசிரியர்களால் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளை விடுமுறைக் காலத்தில் பரவலாக செய்யும் விதத்தில் தினமும் சிறிது நேரத்தை உங்கள் நேர அட்டவணையில் ஒதுக்கிக்கொள்ளுங்கள்.



சில வேளைகளில் பாடசாலையில் வழங்கும் வீட்டு வேலைகளின் அளவு மிக அதிகமானதாக இருக்கலாம். எனினும், அதற்காக நீங்கள் மனம் தளர வேண்டாம். ஏனெனில், விடுமுறைக் காலத்திலும்



அவ்வாறு உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்ல உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால், பெற்றோரின் அனுமதியைப் பெற்று உங்கள் பாடசாலை நண்பர் ஒருவரை உங்களுடன் சில தினங்களைக் கழிப்பதற்காக அழைப்பு விடுக்கலாம். அப்பொழுது உங்களின் நண்பருடன் பாடம் படிக்கவும் விளையாட்டுக்களில் ஈடுபடவும் உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

### தொலைக்காட்சி பார்த்தல்

சிலர் விடுமுறைக் காலத்தில் முழுநாளும் தொலைக்காட்சியைப் பார்ப்பதிலேயே தமது பொன்னான நேரத்தை வீணாக்குகின்றனர். எனினும், தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் ஒரு சில நிகழ்ச்சிகளைத் தவிர, ஏனையவை மாணவர்களாகிய உங்களுக்கு பொருத்தமற்றவை என்பதை மனதில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். தொலைக்காட்சி பார்க்கும்போது அறிவுபூர்வமான நிகழ்ச்சிகள், சிறுவர் கதைகள், சிறுவர் திரைப்படங்கள், கார்ட்டூன்கள், செய்திகள் போன்றவற்றைத் தெரிவுசெய்து அந்த நிகழ்ச்சிகளை மாத்திரம் பார்ப்பதற்கு ஏற்றவகையில் உங்கள் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்.

### வீட்டு வேலைகளில் பெரியோருக்கு உதவுதல்

பாடசாலை நாட்களில் கல்விச் செயற்பாடுகளுக்காக, அதிக நேரத்தை செலவழிக்க வேண்டி இருப்பதால், வீட்டில் பெற்றோர் உள்ளிட்ட பெரியோர்களுக்கு உதவிசெய்வதற்கு உங்களுக்கு கால அவகாசம் கிடைக்க வாய்ப்பில்லை. எனினும், விடுமுறைக் காலத்தில் சமையல் வேலைகளில் உதவவோ, வீட்டைக் கூட்டிச் சுத்தப்படுத்தவோ, வீட்டுத் தோட்ட வேலைகளிலோ உங்களை ஈடுபடுத்திக்கொள்வது மிகச் சிறந்த பண்பாகும். இதன்மூலம் சில அனுபவங்களைப் பெறுவதோடு, பெரியோருக்கு உதவ நல்ல வாய்ப்பும் கிடைக்கின்றது. வீட்டுத்தோட்ட வேலைகளில் ஈடுபடும்போது, அதனை அழகுபடுத்தவும் ஏதாவதொரு பயிரை நாட்டவும் முயற்சியுங்கள்.

### இதர அம்சங்கள்

விடுமுறைக் காலத்தில் நீங்கள் வாழும் பிரதேசங்களில் ஏதேனும் நற்பணிகளை மேற்கொள்ள முடிந்தால் அல்லது பொதுச்சேவைக்கு உதவ முடிந்தால் தயக்கமின்றிப் பங்குகொள்ளுங்கள். அயலவர்களுடன், நண்பர்களுடன் இணைந்து பெரியவர்களின் உதவியுடன் உங்கள் பிரதேசத்தில் சிரமதானப் பணிகளை செய்தால் மிகவும் சிறந்தது.

அவ்வாறே, விடுமுறை கொடுக்கப்பட்டதிலிருந்து முடியும்வரை நீங்கள் விடுமுறைக் காலத்தைக் கழித்த விதம் குறித்து குறிப்பொன்றை எழுதி வையுங்கள். அதில் வழமையான விடயங்களுடன் ஏதாவது விசேட விடயம் ஏதும் உள்ளடக்க முடிந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அதன் மூலம் விடுமுறைக் காலம் முடிவடையும்போது அதனை எந்தளவிற்கு பலனுள்ளதாகக் கழித்திருக்கிறோம் என்பதை உங்களால் உணரக் கூடியதாக இருக்கும். இவையெல்லாம் உங்களுக்கு சிறந்த பயன்களையும் அனுபவத்தையும் பெற்றுத் தரும்.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோரைப் பேணல்

முதியோர் என்பவர்கள் வயதில், அனுபவத்தில் முதிர்ந்தவர்கள். தற்காலத்தில் முதியோரைப் பேணல் என்பது முக்கியமானதொரு விடயமாக உள்ளது.

தற்கால சூழலுக்கு ஏற்ப அனைவரும் தமது கடமைகளுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமையால், முதியோர்கள் வேலையாட்கள் மூலமும் முதியோர் இல்லங்களிலும் பராமரிக்கப்படுகின்றனர். எனினும், இவை அனைத்தும் முதியவர்களின் மீதான அக்கறையின்மை என்றே கூற வேண்டும். இன்று வரை பல முதியோர்கள் உரிய பராமரிப்பு இல்லாமல் வீதிகளில் அனாதையாகப் பிச்சையெடுக்கின்றனர். சிலர் அதிர்ஷ்ட வசமாக பராமரிப்பு இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இத்தகைய பராமரிப்பு இல்லங் கள் ஒரு நாட்டில் அதிகமாக இருப்பின், அந்நாட்டில் மனிதாபிமானம் இல்லை என்பதே அர்த்தமாகின்றது.



ஒவ்வொரு குடும்பமும் முதியோரைப் பேணுவதன் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். ஏனெனில், நல்ல சமுதாயத்தை உருவாக்குவதும் இளைஞர்களை வழிநடத்துவதும் அவர்களே, நல்ல மனமும் மனிதாபிமானமும் அன்பும் இரக்கமும் உள்ளோர் முதியோரை என்றும் கைவிடமாட்டார்கள். முதியோரைப் பேணுவதன்மூலம் அவர்களது அன்பையும் ஆசியையும் பெற்று வாழ்வில் உயர்வடையலாம். இவர்களைப் பேணுவது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையுமாகும். முதியோர்கள் பேணப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவே ஒக்டோபர் 01 ஆம் திகதி சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாமும் முதியோரைப் பேணி நல்ல சமுதாயமொன்றை உருவாக்குவோம்.

ஏ.எம்.எஃப்.ஷஹானா,
இ/ஜெய்லானி தே.பாட., பலாங்கொடை.

# கின்னஸின் கதை

கின்னஸ் புத்தகம் (The Guinness Book of Records) உலக சாதனையாளர்களின் சாதனைப் பதிவாகக் கருதப்படுகின்றது. பிரித்தானியாவை தலைமையகமாகக்கொண்ட இப்புத்தகத்தின் வரலாறு Guiness Brewery எனும் ஒரு தயாரிப்பு நிறுவனத்தில் ஆரம்பிக்கின்றது. 1951 இல் இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் சேர்.ஹக்பீவர், அயர்லாந்தில் நடைபெற்ற ஒரு விருந்தில் கலந்துகொண்டபோது, ஐரோப்பாவில் மிக வேகமாகப் பறக்கும் பறவை எது? என்பது குறித்து ஒரு விவாதம் எழுந்தது. இதுபோன்ற வினாக்களுக்கு விடையளிக்க ஒரு புத்தகம் வெளியிட்டால் என்ன? என்ற எண்ணம் அப்போதுதான் உருவானது.




தொடர்ந்து நோரிஸ் மற்றும் மெக்வேர்டர் எனும் இரட்டையர்களிடம் கின்னஸ் சாதனைப் புத்தகம் தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. 118 பக்கம் கொண்டிருந்த இதன் முதற் பதிப்பு 1955 ஆகஸ்ட், 27 ஆம் திகதி வெளியானது. தற்போது இது ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் மற்றும் ஜப்பானிய மொழிகளில் வெளியாகி வருகின்றது.

*ஸனீஹா ஷரீப், மதீனா தேசிய பாடசாலை, சியம்பலாகஸ்கொடுவ.*



# மீன்கள்

ஆட்டுவிக்கும் ஒருவனின் அசைவிற்கேற்ப
ஆடும் மீன்களைப் பார்!

ஆட்கள் எல்லாம் கூடி நின்று
வேடிக்கை பார்க்கும் அழகைப்பார்!

ஆறறிவு படைத்த மனிதனுக்கும்
இவ்வாறு செய்திடத்தான் முடியுமோ!

ஆண்டவன் படைப்பில் ஆயிரம்
வினோதங்களைப் பார்!

நாமும் பயிற்சிகள் செய்தே
காட்டலாம் பலவித்தைகள்!

கே.சதுர்ஷன்,
புனித திரித்துவக் கல்.,
கண்டி.

# நகரத்து எலியின் நாகரிக வாழ்வு

நகரத்தில் உள்ள எலி ஒன்று தனது நண்பனைப் பார்ப்பதற்கு பட்டி என்ற கிராமத்துக்கு வந்தது. அது ஒரு சிறிய கிராமம். கிராமத்து எலி தனது விருந்தினரை மிக நன்றாக வரவேற்றது. பழங்கள், முட்டைகள், விதைகள் மற்றும் புதிதாக விளைந்த தானியங்களைக் கொடுத்து அன்பாக உபசரித்தது.

நகரத்து எலிக்கு இவை எதுவுமே பிடிக்கவில்லை. "இவை என்ன மிகவும் சாதாரண உணவுகள். சுற்றிலும் குப்பையும் தூசுமாக உள்ளது. எனக்கு இவை பிடிக்கவே இல்லை. நீ சுத்த மோசம். நகரம் எவ்வளவு பிரமாதம்! அங்கு நான் ஆனந்தமான வாழ்க்கையை நடத்துகிறேன். நீ ஒரு தடவை அதனை வந்து பார்" என்று நகரத்து எலி கேலி செய்தது. இதனால், கிராமத்து எலி வெட்கத்தில் கூனிக் குறுகி நின்றது.

அதற்கும் நகரத்தின் நாகரிக வாழ்க்கையைப் பார்க்க மிகுந்த ஆசையாக இருந்தது. அதனால், இரண்டு எலிகளும் நகரத்திற்குப் பயணித்தன. அது ஆடம்பரமான ஒரு பெரிய பங்களா. அதில் அழகிய சமையல் அறை. விதவிதமான உணவுகள், ரொட்டி, கேக், முட்டை, மாமிசம் வறுவல், வாழைப்பழம், அப்பிள் என பல்வேறு விதமான உணவு வகைகளும் காணப்பட்டன.

நகரத்து எலி மிகுந்த பெருமையுடன் தன் நண்பனுக்கு விருந்து வைத்தது. இரண்டு எலிகளும் ஆசையுடன் உணவுகளை ருசி பார்த்துக்கொண்டிருந்த வேளையில், திடீரென சமையலறையின் கதவு திறக்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து ஒரு நாயின் பயங்கரமான குரைப்புச் சத்தமும் கேட்டது. அதேவேளை, ஒரு மனிதன் கையில் தடியுடன் உள்ளே வந்துகொண்டிருந்தான். எலிகள் இரண்டும் பயத்தில் கிடு கிடுவென நடுங்கின. திசைக்கு ஒன்றாக சிதறி ஓடி ஒளிந்தன.



சிறிது நேரத்தில் அந்த மனிதர் சென்ற பின்னர், கிராமத்து எலி, "நண்பனே! எனக்கு இந்த ஆடம்பரம் எதுவும் வேண்டாம். அமைதியான அழகான எனது கிராமத்து வாழ்வே போதுமானது. அங்கே கிடைக்கும் சத்துணவே மேல்" என்று கூறிவிட்டு கிராமத்தை நோக்கி ஓட்டம் பிடித்தது அந்த எலி.



பாத்திமா ஃபகுஹா,
அக்குறனை மு.பா.மு.வித்.,
அக்குறனை.

# உங்களுக்குத் தெரியுமா?

★ ஏனைய நாடுகளில் இல்லாத ஒரு தனித்தன்மை, சான் மரினோ நாட்டுக்கு உண்டு. அங்கே ஒரே சமயத்தில் இரண்டு பிரதமர்கள் ஆட்சியில் இருக்கின்றனர்.



★ கடல் நீர் என்றதும் உப்புக் கரிக்கும் தன்மை தான் நினைவுக்கு வரும். ஆனால், மொத்தக் கடல் நீரில் 35% மட்டுமே உப்புத் தன்மையுடையது.



★ ஒரு புலியின் பாதச் சுவட்டை வைத்தே அது ஆண் புலியா அல்லது பெண் புலியா என்பதையும் அதன் வயது,எடை, நீளம் ஆகியவற்றையும் ஆராய்ச்சியாளர்களால் கண்டறிய முடியும்.



★ ஓர் ஆண்டு முழுவதும் தொடர்ந்து ஊர்ந்து சென்றால்கூட, மூன்று மைல்தூரத்தை மட்டுமே நத்தையால் கடந்து செல்ல முடியும்.



★ ஒரு மைலுக்கு அப்பால் இருக்கும் நீரைக்கூட, எளிதாகக் கண்டுபிடித்துவிடும் அளவுக்கு பார்வைத் திறன் கொண்டது ஒட்டகம்.



★ எப்போதும் நீரில் வாழும் மீன்கள், ஒரு போதும் நீர் அருந்துவது கிடையாது.

எஸ்.பிரகதீஸ்வரன்,
ஹைலெவல் சர்வதேச பாடசாலை,
ஹட்டன்.




# மனித உடல் உறுப்புகளின் நிறை

| | | |
|---|---|---|
| தோல் | - 10886 கிராம் | - 384 அவுன்ஸ் |
| கல்லீரல் | - 1505 கிராம் | - 55 அவுன்ஸ் |
| மூளை (ஆண்) | - 1408 கிராம் | - 49.7 அவுன்ஸ் |
| நுரையீரல் (வலது) | - 580 கிராம் | - 20.5 அவுன்ஸ் |
| இதயம் (ஆண்) | - 315 கிராம் | - 11.1 அவுன்ஸ் |
| இதயம் (பெண்) | - 265 கிராம் | - 9.3 அவுன்ஸ் |
| சிறுநீரகம் (வலது) | - 140 கிராம் | - 4.9 அவுன்ஸ் |
| சிறுநீரகம் (இடது) | - 150 கிராம் | - 5.3 அவுன்ஸ் |
| மண்ணீரல் | - 170 கிராம் | - 5.3 அவுன்ஸ் |
| கணையம் | - 98 கிராம் | - 3.5 அவுன்ஸ் |
| கேடயச் சுரப்பி | - 35 கிராம் | - 1.2 அவுன்ஸ் |
| இனப்பெருக்கத் தொகுதி | - 20 கிராம் | - 0.7 அவுன்ஸ் |

முஹம்மது ஜில்சி, ஸாஹிரா தே.பாட., புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவெளிகளை நிரப்புக — 1

1. XVIII, ..............., XIV, XII, ..........
2. .........., XL, .........., LX, LXX
3. C, .........., CXX, ........., CXL
4. .........., IV, .........., VIII, ............

## ஒருமை, பன்மை தருக — 2

| ஒருமை | பன்மை |
|---|---|
| 1. முள் | ...................... |
| 2. ........... | பற்கள் |
| 3. நட்சத்திரம் | ...................... |
| 4. கடிதம் | ...................... |
| 5. ................. | அடையாளங்கள் |

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 3



### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 341 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பா.சுதர்சன், கெட்டேதென்ன, கஹவத்தை.

**போட்டி: 02**
ப.நிவேதிதா, ஆரையம்பதி-02, மட்டக்களப்பு.

**போட்டி: 03**
எம்.ஐயாஸ், பெருந்தெரு, கிண்ணியா -05.

**போட்டி: 04**
எம்.முயிஸ்டீன், முஸ்லிம் கொலனி, கதுருவெல.

**போட்டி: 05**
எம்.ரிபாஸ், நியூ கடான்டுகம, புப்போகம.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ எஃப்.சபீஹா, பொல்கஹவளை.
- ★ வி.தியாகு, பண்டாரவளை.
- ★ மர்சூகா பேகம், சிலாபம்.
- ★ எம்.ரஸீம், அரநாயக்க.
- ★ என்.ஸ்டீபன், நீர்கொழும்பு.
- ★ வஸீம் அஹமட், பதுளை.
- ★ எஸ்.ராபியா, கொலன்னாவை.
- ★ எஃப்.துல்பிகா, தெனிபிடிய.
- ★ ரா.வத்சலா, பூண்டுலோயா.
- ★ ம.நிவேதன் கல்முனை.





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.12.28ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 344**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## பின்வரும் படங்களை அவற்றின் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களுடன் இணைக்க — 4

h

j

k

l

m



## அருகிலுள்ள சொற்களை எழுத்துக்கூட்டங்களுக்குள் இனங்கண்டு, நிறந்தீட்டுங்கள் — 5


eye
pony
yoyo
panda
arrow
parrot




| | | | | | |
|---|---|---|---|---|---|
| v | a | r | r | o | w |
| y | o | y | o | y | l |
| n | k | d | e | y | e |
| o | n | p | t | a | t |
| p | a | r | r | o | t |
| p | a | n | d | a | s |

## அறிவுக்கு விருந்து 341 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**



**போட்டி: 04**
1. சுடும் 2. புறங்கூறான் 3. குற்றம் 4. உயிரினும்

**போட்டி: 05**
1. பிழை 2. சரி 3. சரி

## விஜய் வாசகர் மடல்

'வெற்றிக்கு வழிகாட்டும் போட்டி மனப்பான்மை' எனும் பகுதி மாணவர்களாகிய எமக்கு சிறந்த அறிவுரையைப் புகட்டுவதாக அமைந்திருந்தது. 'இராமாயணம்', 'வரலாற்றிலிருந்து' என்பன சுப்பர்.

**- எம். அக்ரம், நிலாவெளி, திருகோணமலை.**

விஜய்யே! மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் நீயே முதன்மையாளன். பொருத்தமான, காலத்திற்கேற்ற ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்குவதில் உன்னைப்போல் யாருமில்லை. 'கல்வி முகாமைத்துவம்', 'சா/தர பரீட்சைக்கான கற்றல் வழிகாட்டல்', 'படிப்பினைக் கதைகள்' என்பன அதற்கு சிறந்த உதாரணங்களாகும். நீ வாழ்க வளமுடன்!

**- து.தயாளினி, பன்னாகம், சுழிபுரம்.**

'சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகளும் முக்கியத்துவமும்' எனும் ஆக்கம் சுங்கத் துறையுடன் தொடர்புடைய ஏராளமான தகவல்களைச் சுமந்து வந்திருந்தது. 'விலங்குகளின் பற்கள்', 'வாரம் ஒரு நாடு', 'விண்வெளித் தகவல்கள்', 'முதலையின் மூதாதைகளின் படிமங்கள்' என்பன உட்பட, 'இடம்பெயரும் உயிரினங்கள்' எனும் ஆக்கமும் பிரமாதம்.

**- சர்பான் ஷரீப், பிரதான வீதி, ஹல்துமுள்ள.**





'சுங்கத் திணைக்களம்', 'உயிரினங்களின் இடப்பெயர்வு', 'கணினித் தகவல்கள்', 'விளையாட்டுப் பகுதி', 'விண்வெளித் தகவல்கள்' என்பனவற்றினூடாக, ஏராளமான தகவல்களைப் பெற்றேன். விஜய்யே! உனது நீண்டநாள் வாசகியாகிய நான், ஏராளமான ஆக்கங்களை உனக்கு அனுப்பியிருக்கின்றேன். இதுவரை எதுவும் பிரசுரமாகவில்லை. நீ என்னை ஒதுக்கிவிட்டாயோ என்று என் மனம் வருந்துகின்றது.

**- அரஃபாத் மின்னா, எலுவிலை, பாணந்துறை.**

✱ வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்கள் தரங்காணப்படும் பட்சத்தில் அவை பிரசுரிக்கப்படும். 'விஜய்' அதன் வாசகர்களுக்கு நிச்சயம் களம் அமைத்துக்கொடுக்கும். எனவே, தொடர்ந்தும் விஜய்யுடன் இணைந்திருங்கள். **(ஆ-ர்)**

'நாய்க்கு வெறி பிடிப்பது ஏன்?', 'நாடுகள் பலவகை', 'புவி நடுக்கம் எவ்வாறு ஏற்படுகின்றது?', 'தெரிந்துகொள்வோம்' போன்ற பகுதிகள் பொது அறிவை ஊட்டக் கூடியவையாக இருந்தன. வாரம்தோறும் உன்னை வாசித்து அதிகம் பயன் பெறுகின்றேன்.

**- நிரோசன தர்ஷன், தோணிக்கல், வவுனியா.**

*'இராமாயணம்' தொடர் என்னை மிகவும் கவர்ந்த பகுதியாகும். விஜய் வாங்கியவுடன் விறுவிறுப்பாக நகர்ந்து செல்லும் அத்தொடரையே முதலில்*



*வாசிக்கின்றேன். நீ தாங்கி வந்திருந்த ஏனைய ஆக்கங்களையும் வாசித்துப் பயன்பெற்றேன்.*

**- எம்.ஜோதீசன், மடுல்கலை, கண்டி.**

'வரலாற்றிலிருந்து' எனும் பகுதி, பாடசாலை வரலாறு பாடத்திற்கு உறுதுணையாக இருக்கின்றது. 'வாரம் ஒரு நாடு' பகுதியூடாக, உலக நாடுகளில் இதுவரை அறிந்திராத நாடுகள் பற்றியும் அறியக்கூடியதாக இருக்கின்றது. உன்னில் தொடர்கதையொன்றை விரைவில் எதிர்பார்க்கின்றேன்.

**-எஃப்.மனால், மன்னார் வீதி, புத்தளம்.**

**இந்த இதழில் (21.12.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.12.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரிகைகளைத் தெரிவு செய்தல்


ஒவியம் வரைவோம் - 81

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்றூப்

**ஓவியப் பாடத்தில் வர்ணம் தீட்டுதல் மிக முக்கியமானதாகும். அதற்குத் தேவையான உபகரணங்கள் சரியாக அமைந்தால்தான் சிறந்த ஒரு படைப்பை உருவாக்க முடியும். வர்ணம் தீட்டுவதற்குப் பயன்படும் பலவகையான வர்ணங்கள் பற்றி கடந்த பாடங்களில் பார்த்தோம். இந்த வாரம் வர்ணத்தை சிறந்த முறையில் உபயோகிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தூரிகைகள் (Brushes) பற்றிப் பார்ப்போம்.**

இலங்கையில் இன்றளவில் பல வகையான தூரிகைகள் பயன்படுத் தப்படுகின்றன. அவற்றில் சேப்ல்





மயிர்த் தூரிகையே (Sable hair brush) சிறந்தது என்பது தூரிகை களை உபயோகிப்போரின் கருத்தா கும். இது தவிர; ஒஃஸ் மயிர்த் தூரிகை, அணில் மயிர்த் தூரிகை என பல்வேறு வகையான தூரிகை கள் காணப்படுகின்றன.

ரேகைகள்மூலம் வரையப்படும் ஓவியங்கள் பூரணப்படுத்தப்படுவது வர்ணங்களால் ஆகும். ஓவியம்



வரைந்த பின்னர் அதனை வர்ணம் தீட் டுவதே, மிக முக்கியமான செயற்பாடா கும். வர்ணம் தீட்டுவதன்மூலமே, உயி ரோட்டமுள்ள ஓவியங்களைப் படைக் கலாம். எனவே, இதற்கேற்ற தூரிகை களைத் தெரிவுசெய்வதானது, மிக முக்கியமானதாகும்.

(தொடரும்)



கட்டுகஸ்தொட்டை ஸாஹிரா ஆண்கள் பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கண்காட்சி அண்மையில் பாடசாலை வளாகத் தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜே.ஜெய்லாப்தீன் அழைத்துவரப்படுவதையும் கண்காட்சி அறைகள் சிலவற்றையும் படங்களில் காணலாம். (படமும் தகவலும்: நளீம்)

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



பேருவளை-அம்பேபிடியைச் சேர்ந்த ஸரபான்-ஸபீனா தம்பதியரின் செல்வப் புதல்வி ஸப்னா, 19.12.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



அநுராதபுரம்-அளுத்கமயைச் சேர்ந்த நஜ்மதுல் லாஹ்-ரிஸ்மினா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா றஹ்னா, 20.12.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: றிஸ்வானா ரவுப்)



கண்டியைச் சேர்ந்த குமரதேவன்-சிவாஜினி தம்பதியரின் செல்வப் புதல்வன் வித்தகன், 21.12.2011 ஆகிய இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



எஃப்.ரினோஸி,
ஹமீதியா மு.வித்., கும்பலங்க.



எஃப்.சபானா,
ஹதிரவளான மு.வித்., ஹதிரவளான.



எஃப்.இர்ஹாம்,
நாங்கள்ள மு.ம.வித்., நாங்கள்ள.



என்.தாரணி,
இந்து மகளிர் கல்., வெள்ளவத்தை.

## தம்பி, தங்கைகளே!

## 'கைவண்ணங்கள்' குறித்து உங்கள் கவனத்திற்கு...!



உங்கள் கைவண்ணங்களை 'A4' தாளில் மட்டும் வரைந்து அனுப்புங்கள். அதன் பின்பக்கத்தில் உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர் என்பனவற்றை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.


உங்கள் கற்பனைக்கேற்றவாறு, பல்வேறு கருப்பொருள்களின்கீழ் அலங்காரங்கள், காட்சிகள் என ஓவியங்களை வரைந்து அனுப்பி, கைவண்ணங்கள் பகுதியில் இடம்பிடித்துக்கொள்ளுங்கள். நேர்த்தியாகவும் அழகாகவும் வரையப்படும் ஓவியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



நீ. ஆகாஷ்,
பெரிய கல்லாறு மத்திய கல்.,
பெரிய கல்லாறு.



எம்.சுஹைல்,
பாலமுனை அஷ்ரப் வித்.,
பாலமுனை.




எஃப்.பாஸிலா,
அனுபோத முஸ்லிம் ம.வித்.,
படல்கும்புர.



எஃப்.ரிபாத்,
தில்லையடி முஸ்லிம் ம.வித்.,
தில்லையடி.



ஏ. அனீற்றா,
கார்மேல் பாத்திமா தே.பாட.,
கல்முனை.



சி.ஜீவானந்தன்,
வடிவாம்பிகா த.ம.வித்.,
முன்னேஸ்வரம்.



எஃப்.ஆதிலா பானு,
அல்ஸலாம் மு.ம.வித்.,
இறக்குவானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையற்ற வாழ்வு

பூஞ்சோலை என்ற அழகிய கிராமம் பெயருக்கு ஏற்றபடி, பூத்துக் குலுங்கிய சோலைகளுடன் காட்சி அளித்தது. விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுதில் மக்கள் அங்கும் இங்குமாகப் பரபரப்பாகச் சென்றுகொண்டிருந்தனர். ஊரின் நடுநாயகமாக நின்ற அந்த அரச மரத்தின் அடியில் உள்ள மேடையில் வெண்ணிறத் தாடியுடன் காவி உடையில் கண்களை மூடியபடி முனிவர் ஒருவர் அமர்ந்திருந்தார். அதுதான் அந்த ஊர் மக்களின் அத்தனை பரபரப்புக்கும் காரணம்.



மக்கள் அனைவரும் அன்று தமது தொழிலுக்குச் செல்வதை விட்டுவிட்டு, முனிவரைக் காண அரசமரத்தடிக்குச் சென்றனர். தன்னைச் சுற்றிலும் சலசலப்பு கேட்கவும், முனிவர் தியானம் கலைந்து கண் திறந்தார். ஊர் மக்கள் அனைவரும் தங்களுக்குக் கிடைத்த பால், பழம், இனிப்புப் பலகாரங்களுடன் முனிவரைக் கண்டு ஆசி பெற்றனர்.

"நலமே, வாழி!" முனிவர் கண் திறந்து மக்களைப் பார்த்துக் கை உயர்த்தி, ஆசி வழங்கினார். மக்கள் நான், நீ என்று முந்திக்கொண்டு தங்கள் குறைகளை அவரிடம் முறையிட்டனர்.

"சுவாமி, நான் இந்த ஊரில், பெரிய மனிதர். எனக்கு நிலபுலன்கள், ஆடு-மாடு என்று நிறைய வசதிகள் உள்ளன.ஆனாலும், பருவ வயதைக் கடந்த எனது மகளுக்கு ஏற்ற வரன் இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு தாங்கள்தான் ஒரு வழிகாட்ட வேண்டும்" என்று ஒருவர் தன் குறையை பவ்யமாகத் தெரிவித்தார். அவர் வேறு யாருமல்ல அந்த ஊர் பண்ணையார்தான்.

"எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள், எல்லாம் சரியாகும் மகனே!" என்று முனிவர் ஆசி வழங்கினார்.

"புரியவில்லையே சுவாமி! சற்றுப் புரியும்படியாகச் சொல்லுங்களேன்...!" என்றார் பண்ணையார்.

"உனக்கு எத்தனை பெண் குழந்தைகள்?"

"ஒரே பெண்தான் சுவாமி".

"எந்த மாதிரி மாப்பிள்ளை தேடுகிறாய்?, மகனே!"

"சுவாமி எனக்கு மருமகனாக வரப் போகிறவன் என்னைவிட மூன்று மடங்கு வசதி உள்ளவனாக இருக்க வேண்டும்."

"எதற்காக, அப்படி ஆசைப்படுகிறாய்?"

"அப்போதுதான் எனக்கு மரியாதையும், கௌரவமும் கிடைக்கும்".

"உனக்கு உனது மரியாதையும், கௌரவமும் தான் முக்கியம். உனது மகளின் வாழ்க்கை முக்கியம் அல்ல. அப்படித்தானே!"

"அது வந்து.... சுவாமி....!"

"வாழ்க்கை நிலையற்றது. வசதி வாய்ப்புகளும் அப்படித்தான். உனக்கு முன் இந்த சொத்துக்கள் அனைத்தும் வேறொருவரிடம் இருந்தது. உனக்குப் பின்பும் இவை அனைத்தும் வேறொருவரிடம் இருக்கும். இதில், உனக்கு மரியாதையும் கௌரவமும் எங்கிருந்து வந்தது?"

"சுவாமி தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?"

"நன்கு உழைப்பவனாக, உனது சொத்துக்களை நிர்வாகம் செய்பவனாக, உன் மகளை நன்றாகக் கவனித்துக்கொள்ளும் மனம் படைத்தவனாக, இருக்கும் ஒருவனைத் தேர்வு செய். அப்படித் தேடினால், ஒருவேளை இந்த ஊரிலேயேகூட, ஒருவன் கிடைக்கக்கூடும்" என்றார் முனிவர்.

"அப்படியே ஆகட்டும் சுவாமி" என்று கூறிக்கொண்டு பண்ணையார் திருப்தியுடன் வீட்டிற்குச் சென்றார்.

# கபட மந்திரியை வென்ற விகடகவி

மன்னர் இந்திரசேனருக்குப் பின்னர் தானே நாட்டை ஆள வேண்டும் என்று நப்பாசை கொண்டிருந்தார் மந்திரி. அதனால், மன்னரை எப்போதும் தன் பிடிக்குள் வைத்திருந்தார். அவரைச் சிந்தித்து முடிவு எடுக்க விடாமல், தான் சொல்வதையே வேதவாக்காகக் கொண்டு செயற்பட வைத்தார்.



"மன்னா, அறிவாளிகளுக்கு மட்டுமே தெரியும், பச்சை நிறக் காகம் அதோ.... வானில் பறக்கிறதே, உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா?" என்று மன்னரிடம் கேட்டார், மந்திரி.

வானில் அவர் சொன்னது போன்று பச்சை நிறக் காகம் எதுவும் பறக்கவில்லை. கறுப்பு நிறக் காகம்தான் பறந்து சென்றது. அறிவாளிகளுக்கு மட்டுமே பச்சை நிறக் காகம் தெரிவது போல் அவர் கூறி இருந்ததால், தன்னை முட்டாள் என்று மந்திரி நினைத்துவிடக் கூடாது என்று நினைத்த மன்னர் "மந்திரியாரே, தெரிகிறது. பச்சை நிறக் காகம் என் கண்களுக்கு மிக நன்றாகத் தெரிகிறது" என்றார்.

மன்னர் சரியான முட்டாளாக மாறிவிட்டார். 'இனி நான் வைத்தது தான் சட்டம்' என்று மனதுக்குள் சந்தோஷப்பட்டார், மந்திரி. மன்னர் மந்திரி சொல்லும் அறிவுரைப்படி, முட்டாள்தனமாக நடப்பதைக் கண்டு நாடே வேதனைப்பட்டது. இதை அறிந்த விகடகவி ஒருவர் மன்னரை மந்திரியின் பிடியில் இருந்து மீட்க முடிவு செய்தார். மன்னரைச் சந்தித்த அவர் மந்திரியின் புத்திசாலித்தனத்தை மதிப்பிட, அறிவுப்போட்டி ஒன்றை நடத்தலாம் என்று ஆலோசனை கூறினார். மன்னரும் விகடகவியின் ஆலோசனையை ஏற்று, அதன்படி அறிவித்தார். அறிவுப் போட்டி நடக்கும் நாள் வந்தது.

விகடகவி வெள்ளைப் புறா ஒன்றை மேடையில் ஓர் ஓரமாக மறைந்து நின்றுகொண்டு, பறக்க விட்டார். தமது முன்பாக புறா பறப்பதைக் கண்ட மன்னர்

"மந்திரியாரே இந்தப் புறா, எவ்வளவு வெண்மையாகவும், அழகாகவும் இருக்கிறது" என்று கூறினார்.

உடனே மந்திரி வழக்கம்போல, மன்னரை முட்டாளாக்க எண்ணினார். "மன்னரே, என் கண்களுக்கு இது பச்சை நிறமாக அல்லவா தெரிகிறது?" என்றார். மன்னரும் முட்டாள் பட்டத்தில் இருந்து தப்ப, "ஆமாம்.... ஆமாம்.... புறா, பச்சை நிறமாகத் தான் தெரிகிறது" என்றார்.

இருவர் உரையாடலையும் மேடையின் பின்புறமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தார், விகடகவி.

உடனே அவர், மேடையின் முன்னால் வந்து புறாவைப் பிடித்துக் கையில் வைத்துக்கொண்டு, "இந்தப் புறாவின் நிறம் என்ன என்பதைச் சொல்லுங்கள்?" என்று சபையோரைப் பார்த்துக் கேட்டார்.

அனைவரும் ஒட்டுமொத்தமாக, "வெள்ளை நிறம்" என்றனர்.

மன்னர் எழுந்து, "இல்லை. இது பச்சை நிறத்தில் உள்ளது" என்று கத்தினார்.

இதைக் கேட்டுப் போட்டியில் பங்கேற்ற அனைவரும் சிரித்தனர்.

அப்போது, மந்திரியைப் பார்த்து, "இந்தப் புறாவின் நிறம் என்ன?" என்று விகடகவி கேட்டார். அவரும் வேறுவழியின்றிப், பச்சை நிறம் என்றார்.

புறா வளர்க்கும் பெரியவரை மேடைக்கு வரவழைத்து, அவரிடமும் கேட்டார். அவரும் "இப்புறா, வெள்ளை நிறம்" என்று கூறினார்.

உடனே மன்னர், அவமானம் தாங்க முடியாமல் அரண்மனைக்குள் சென்றார். விகடகவியும், மன்னரின் பின்னால் சென்று, மந்திரியின் மோசடியைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார். கோபமடைந்த மன்னர் தன்னை இவ்வளவு நாளும் முட்டாளாக்கிய அந்தக் கபட மந்திரியை சிறையில் அடைத்தார். புத்திசாலியான விகடகவிக்கு பரிசாக பொன்னும் பொருளும் அள்ளிக்கொடுத்தார்.

# கற்றுக்கொண்ட பாடம்

மலையும் அணைக்கட்டும் அடர்ந்த காடும் நிறைந்த மணிமுத்தாறு அருவியில் குளிப்பதற்காக, இறுதியாண்டு விடுமுறையில் பெற்றோருடன் சென்றிருந்தான் சோமு. அருவியோரத்தில் இளந்தென்றல் இனிமையாக வீசிக்கொண்டிருந்தது. சோமுவின் பெற்றோர் அருவியில் ஆனந்தமாக குளியலில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், சோமுவோ அங்கிருந்த சிறுவர்களுடன் படகேறி ஆற்றின் அக்கரைக்குச் சென்று அருகில் உள்ள அடர்ந்த காட்டின் மரச்செறிவுக்குள் புகுந்து அவர்களுடன் மரம் ஏறிவிளையாடிக் கொண்டிருந்தான். இதே வேளை சிறுத்தை ஒன்று, தன் குட்டிகளுடன் இரை தேடியபடி அந்த அடர்ந்த காட்டின் புதர்களுடே வந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததுமே ஏனைய சிறுவர்கள் அச்சத்தால் அங்கிருந்து ஓடி விட்டனர். சோமு மட்டும் அஞ்சாமல் மரச்செறிவுக்குள் மறைந்துகொண்டு, சிறுத்தையையும் அதன் குட்டிகளையும் பார்த்துக் கொண்டிருந்தான்.



அப்போது, அவனுக்கு ஒரு விபரீதமான எண்ணம் உதயமானது. சிறு கல் ஒன்றை எடுத்து சிறுத்தைக் குட்டியின் மீது எறிந்தான். குட்டி பயந்தோடிச் சென்று தாய்ச் சிறுத்தையுடன் நின்றுகொண்டது. மீண்டும் சோமு கல்லை எடுத்து தாய் சிறுத்தை மீது எறிந்தான்.

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல, இரை தேடி வந்த சிறுத்தையைச் சீண்டிவிட்டான் சோமு. அதுவும், ஆத்திரத்தோடு "உர்ர்..... உர்ர்....." என உறுமியபடி சோமுவை தாக்கத் தயாரானது. அவனைப் பிடித்துக் கொன்றுவிடும் எண்ணத்தில் பயங்கரமாகப் பாய்ந்து விரட்டியது. சோமு அலறியடித்துக்கொண்டு, அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது ஏறி மறைந்துகொண்டான். ஆனாலும், சிறுத்தையின் கோபம் அடங்கவில்லை. அது சோமு இருக்கும் மரத்தின்மீது "மளமள"வென ஏறியது.

சோமு, மரண பயத்தில் அலறினான்.

அப்போது அங்கு வந்துகொண்டிருந்த வன ஊழியர்கள் அவனைப் பார்த்துவிட்டனர். மரத்தின்மீது சிறுத்தை ஏறிக்கொண்டிருப்பதையும் பார்த்து, அவனைக் காப்பாற்ற விரைந்து வந்தனர். மயக்க ஊசியை சிறுத்தையின்மீது துப்பாக்கியால் பாய்ச்ச, அது சிறிது நேரத்தில் மயங்கிக் கீழே விழுந்தது. அருவியில் குளித்துக்கொண்டிருந்த அவன் பெற்றோரும் சத்தம் கேட்டுப் பதற்றத்துடன் அந்த இடம் நோக்கி விரைந்து வந்தனர்.

அவர்களைப் பார்த்து வன ஊழியர்கள், "மயிரிழையில் சிறுவனைக் காப்பாற்றி விட்டோம். நாங்கள் பார்க்காவிட்டால், இந்தப் பையனை சிறுத்தை நிச்சயமாகக் கொன்றிருக்கும். உல்லாசப் பயணமாக இங்கு வரும் நீங்கள், மிருகங்களினால் ஏற்படும் ஆபத்துக்களையும் உணரவேண்டும். அவற்றை சீண்டாமல் பாதுகாப்புடன் நின்று பார்க்கும்போது மிருகங்கள் ஒன்றும் செய்வதில்லை. அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படும்படி நடந்துகொண்டால்தான் இந்த மாதிரி ஆபத்துக்கள் ஏற்படும்" என்றனர்.

சோமு தெய்வம்போல் வந்து காப்பாற்றிய அந்த வன ஊழியர்களிடம் மன்னிப்புக் கேட்டான். மயிரிழையில் உயிர் தப்பிய அவன் இனிமேல் இதுபோன்று ஒருபோதும் செய்வதில்லை என மனதில் உறுதிபூண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அப்பா, அம்மா, மகள், மகன் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்

තාත්තා: **දුව, පුතා අපට මේ සතියේ දිග නිවාඩුවක් තියෙනව නේද?**
துவ, புதா அபட்ட மே சதியே திக நிவாடுவக் தியெனவா நேத?
அப்பா: **மகள், மகன் இந்தக் கிழமையில் எங்களுக்கு ஒரு நீண்ட விடுமுறை இருக்கிறது அல்லவா?**

පුතා: **ඔව් තාත්තේ, සඳුදත් නිවාඩු.**
ஒவ் தாத்தே, சந்துதத் நிவாடு.
மகன்: **ஆம் அப்பா, திங்கட்கிழமையும் விடுமுறை.**

දුව: **තාත්තේ අපි කොහේ හරි යමුද?**
தாத்தே அபி கொஹே ஹறி யமுத?
மகள்: **அப்பா நாங்கள் எங்கேயாவது போவோமா?**

අම්මා: **ඒක නම් හොඳ අදහස. අපි හුඟ කාලෙකින් කොහෙවත් ගියේ නැහැ.**
ஏக நம் ஹொந்த அதஹச. அபி ஹுங்க காலெகின் கொஹெவத் கியே நெஹெ.
அம்மா: **அதுவென்றால் நல்ல யோசனை. நாங்கள் நீண்ட நாட்களாக எங்கேயும் போகவில்லை.**

තාත්තා: **අපි කොහේද යන්නේ?**
அபி கொஹேத யன்னே?
அப்பா: **நாங்கள் எங்கே போவோம்?**

දුව: **අපි නුවර මාමලගේ ගෙදර යමු.**
அபி நுவர மாமலகே கெதற யமு.
மகள்: **நாங்கள் கண்டி மாமா வீட்டுக்குப் போவோம்.**

පුතා: **ඒක හොඳයි. මට මල්ලිත් එක්ක ක්‍රිකට් ගහන්නත් පුළුවන්.**
ஏக ஹொந்தய். மட்ட மல்லித் எக்க கிரிக்கெட் கஹன்னத் புலுவன்.
மகன்: **அது நல்லது. எனக்கு தம்பியோடு கிரிக்கெட் விளையாடலாம்.**

තාත්තා: **එහෙනම් හෙට උදේම ලෑහැස්ති වෙන්න.**
எஹெனம் ஹெட்ட உதேம லெஹெஸ்தி வென்ன.
அப்பா: **அப்படியென்றால் நாளை காலையிலேயே ஆயத்தமாகுங்கள்.**

දුව: **තාත්තේ අපි කෝච්චියේ යමු.**
தாத்தே அபி கோச்சியே யமு.
மகள்: **அப்பா நாங்கள் புகையிரதத்தில் போவோம்.**

අම්මා: **පුතා මාමාට කෝල් කරල කියන්න අපි එනව කියලා.**
புதா மாமாட்ட கோல் கறல கியன்ன அபி எனவா கியலா.
அம்மா: **மகன் மாமாவைத் தொடர்புகொண்டு நாங்கள் வருவதாகச் சொல்லுங்கள்.**

පුතා: **හොඳයි අම්මේ, මම කියන්නම්.**
ஹொந்தய் அம்மே, மம கியன்னம்.
மகன்: **நல்லது அம்மா, நான் சொல்கிறேன்.**

**பயிற்சி**

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. திங்கட்கிழமை விடுமுறை நாள்.
..........................................................
ii. நாங்கள் மாமா வீட்டுக்குப் போவோம்.
..........................................................
iii. நாளை காலையிலேயே ஆயத்தமாகுங்கள்.
..........................................................






* 'If' எனும் இணைக்கும் சொல்லை (Joining word) கையாண்டு ஒன்றிணைக் கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம்.

(அ) உனக்கு உதவி தேவையெனில், நாங்கள் உனக்கு உதவுவோம்.
If you need help, we will help you.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* உனக்கு உதவி தேவையெனில்,
If you need help,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* நாங்கள் உனக்கு உதவுவோம்.
We will help you.
(பிரதான வாக்கியப் பகுதி-Principal Clause)

(ஆ) நீ கடிதத்தை தெளிவாக எழுதினால், என்னால் அதை வாசிக்க முடியும்.
If you write the letter clearly, I can read it.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* நீ கடிதத்தை தெளிவாக எழுதினால்,
If you write the letter clearly,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* என்னால் அதை வாசிக்க முடியும்.
I can read it.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(இ) நீ பணத்தைப் பெற்றுக்கொண்டால், அதை எனக்கு கட்டாயம் தர வேண்டும்.
If you get the money, you must give it to me.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* நீ பணத்தைப் பெற்றுக்கொண்டால்,
If you get the money,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* நீ அதை எனக்குக் கட்டாயம் தர வேண்டும்.
You must give it to me.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஈ) மேரி உரிய நேரத்துக்கு அங்கே சென்றால், அவளால் ரயிலைப் பிடிக்க முடியும்.
If Mary goes there on time, she can catch the train.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* மேரி உரிய நேரத்துக்கு அங்கே சென்றால்,
If Mary goes there on time,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* அவளால் ரயிலைப் பிடிக்க முடியும்.
She can catch the train.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(உ) ரங்கனுக்கு நேரம் கிடைத்தால், அவன் அந்த வேலையைச் செய்வான்.
If Rangan has the time, he will do that work.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* ரங்கனுக்கு நேரம் கிடைத்தால்,
If Rangan has the time,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* அவன் அந்த வேலையைச் செய்வான்.
He will do that work.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தை ஒப்படைக்குமாறு ஒபாமா கோரிக்கை...

ஈரான் நாட்டின் வான் பகுதியில் ஊடுருவிய அமெரிக்காவின் 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா உளவு விமானத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஈரான் அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

எனினும் ஒபாமாவின் இந்த கோரிக்கையை ஈரான் நிராகரித்துள்ளது. தாம் இந்த விமானத்தை ஒப்படைக்க மாட்டோம் என்று ஈரான் அறிவித்துள்ளது.

நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட 'ஆர் கியூ 170 சென்டினல்' ரக விமானமே இவ்வாறு ஈரானினால் கைப்பற்றப்பட்டது. இந்த விமானத்தை உளவு பார்ப்பதற்காகவே, அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. குறித்த விமானம் தமது வான் எல்லைக்குள் பிரவேசித்தமையின் காரணத்தினாலேயே, 'தம்மால் அது சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஈரான் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் இது குறித்து






எந்தவொரு கருத்தையும் அமெரிக்கா தெரிவிக்கவில்லை. இருப்பினும் கைப்பற்றப்பட்ட விமானத்தை ஈரான் தமது ஊடகங்களின்மூலம் வெளிக்காட்டியதையடுத்தே, அந்த விமானத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

அண்மைக்காலமாக, அமெரிக்காவிற்கும் ஈரானுக்குமிடையே முறுகலான நிலை ஏற்பட்டுள்ள சூழலிலேயே, அமெரிக்காவின் விமானத்தை ஈரான் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பிரிட்டன் பிரதமர் மீது கூட்டணியினர் அதிருப்தி



யூரோ வலய நாடுகளின் மாநாடு பிரெஸெல்ஸில் நடைபெற்றபோது, பிரிட்டன் பிரதமர் கெமரூன் ஐரோப்பிய ஒன்றிய அமைப்பிலிருந்து பிரிட்டனைத் தனிமைப்படுத்தும் வகையில் நடந்துகொண்டதாக கூட்டணிக் கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக, ஆளும் கூட்டணி அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த மாநாட்டின் போது, உடன்படிக்கையில் விசேட அம்சங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் பிரிட்டனுக்குரிய 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறியதன்மூலமே கெமரூன் இத்தகைய, தவறைச் செய்திருப்பதாக கூட்டணிக் கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

குறிப்பாக, யூரோ வலயத்தில் நிலவுகின்ற நிதி நெருக்கடி தொடர்பான பேச்சுக்களின் பெறுபேறுகள் பிரிட்டனுக்குப் பாதிப்பாக அமைந்திருப்பதை உணர்ந்தும்கூட, அதனைத் தடுப்பதற்கு கெமரூன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறிவிட்டதாகவே கூட்டணிக் கட்சிகள் குறைகூறுகின்றன. இந்த அதிருப்தி நிலை ஐரோப்பாவில் நிதி நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே செய்யும் என்றும் கருதப்படுகின்றது.

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

### அற்லஸ் கேள்வி - 339

**கேள்வி:** ஈரான் வான் பரப்பில் ஊடுருவிய அமெரிக்க உளவு விமானத்தின் பெயர் என்ன?

சரியான விடை..............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 339,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 337 இன் சரியான விடை: 33 வருடங்கள்**

பரிசு பெறுவோர்

எஸ்.அருண்சாந்த்,
பேராதெனிய வீதி,
கண்டி.

கே.வானதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.


அம்மர் யாஸிர்,
புதுச்செட்டித்தெரு,கொழும்பு-13

# நத்தார் நிகழ்வில் மிஷெல் ஒபாமா



இன்னும் சில தினங்களில் கொண்டாடப்படவுள்ள நத்தார் தினத்தையொட்டி அமெரிக்காவின் வொஷிங்டன் நகரிலுள்ள 'தேசிய சிறுவர் மருத்துவ நிலையத்தில்' சிகிச்சை பெற்று வருகின்ற சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் பொருட்டு விசேட நத்தார் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த கொண்டாட்டங்களில் அமெரிக்க ஜனாதிபதியின் பாரியார் மிஷெல் ஒபாமா உட்பட, நத்தார் தாத்தாவும் கலந்துகொண்டார்.

# தெரிந்து கொள்வோம்



* அனுராதபுர ஆட்சிக்காலத்தில் எல்லாள மன்னனை தோற்கடித்தவர் துட்டகைமுனு மன்னர் ஆவார். அவ்வாறே, பொலன்னறுவை ஆட்சிக்காலத்தில் சோழர்களைத் தோற்கடித்த மன்னர் யார்?
  முதலாம் விஜயபாகு



* இலங்கைப் பிரதமர் S.W.R.D பண்டாரநாயக்க 1959 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அவ்வாறே, இந்தியப் பிரதமர் ஒருவரும் சுட்டுக்கொல்லப் பட்டார். அவரின் பெயர் என்ன?
  இந்திரா காந்தி



* சர்வதேச அணுசக்தி ஏஜன்சி (IAEA) 1957 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் எங்குள்ளது?
  வியன்னா- (ஒஸ்ட்ரியா)
* 'தொல்காப்பியம்' என்பது தமிழ் மொழியில் முதலில் எழுதப்பட்ட இலக்கண நூலாகும். அதன் பின்னர் தமிழில் எழுதப்பட்ட பிரதான இலக்கண நூல் எது? அது யாரால் எழுதப்பட்டது?
  நன்னூல் - பவனந்தி முனிவர்



* சூரியனிலிருந்து மிகவும் தொலைவிலுள்ள கோள் நெப்டியூன் ஆகும். அது சூரியனை ஒருமுறை சுற்றிவர 164.79 புவி வருடங்கள் செல்கின்றது. நெப்டியூன் தன்னைத்தானே சுற்றிவர எவ்வளவு காலம் செல்கின்றது?
  16.11 புவி வருடங்கள்
* முதலாவது உலகப்படத்தை வரைந்தவர் 'தொலமி' ஆவார். அவர் அதில் இலங்கையை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?
  தப்ரபேன்
* உலக ஓசோன் தினம் செப்டெம்பர் 16 ஆகும். சர்வதேச மனித உரிமைகள் தினம் எப்போது?
  டிசம்பர் 10
* பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் ஹப்புகஸ்கந்த என்ற இடத்தில் அமைந்துள்ளது. அவ்வாறே, இலங்கையில் கட்டிப்பால் தொழிற்சாலை எங்கேயுள்ளது?
  பொலன்னறுவையில்



* 2011 ஆம் வருடத்தின் சிறந்த கிரிக்கெட் துடுப்பாட்ட வீரராக குமார் சங்கக்கார தெரிவாகியுள்ளார். அவ்வாறே, 2011 இன் மெய்வல்லுனர் சம்பியனாகத் தெரிவானவர் யார்?
  ஹுசேன் போல்ட் (ஜமேய்க்கா)



* மொகஞ்சதாரோ, ஹரப்பா என்பது புகழ்பெற்ற நகரங்களாகும். இந்த நகரங்கள் எங்கேயுள்ளன? எதற்காக இவை முக்கியத்துவம் பெற்றுள்ளன?
  பாகிஸ்தானில் உள்ளன. இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் நிலவிய பிரதான நகரங்கள் என்பதனால் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் வீழ்ச்சிக்கு காரணம்...?



இலங்கையில் கிரிக்கெட் துறை வீழ்ச்சி நிலைக்கு ஆளாகியுள்ளமைக்கு அணி வீரர்கள் மத்தியில் ஒற்றுமையின்மையே காரணம் என்று





இதனை மறுத்துப் பேசியுள்ள முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அர்ஜுன



## அர்ஜுன, ஜயசூரிய கருத்து முரண்பாடு

இலங்கை அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜயசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இருப்பினும்

ரணதுங்க,இலங்கை கிரிக்கெட் துறை வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளமைக்கு பதவியிலிருந்த இடைக்கால கிரிக்கெட் சபையும் அதன் அதிகாரிகளுமே காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அர்ஜுன ரணதுங்க கிரிக்கெட் சபையானது, வர்த்தக தொழிலதிபர்களின் உறைவிடமாகி விட்டதாகவும், பணம் ஈட்டும் நோக்கிலேயே, இப்பதவிக்கு இவர்கள் முண்டியடிப்பதாகவும், இப்படியானவர்கள் மூலம் எவ்வாறு கிரிக்கெட் துறை வளர்ச்சியைக் காணும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிரிக்கெட் வீரர்கள்மீது குற்றம் சாட்டும் சனத் ஜயசூரியவும், அதிகாரிகள் மீது குற்றம்சாட்டும் அர்ஜுனவும் இருவேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாவர். ஆனால்,1996 இல் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட இலங்கை அணியில் இவர்கள் இருவரும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்டார் ஸ்போர்ட்ஸுக்கு ஒளிபரப்பு உரிமை...

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு ஈ எஸ் பி என் ஸ்டார் ஸ்போட்ஸ் தொலைக்காட்சி சேவை 5 ஆண்டுகாலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2017 ஆம் ஆண்டு

STAR CRICKET

வரையில் அவுஸ்திரேலியாவில் 27 டெஸ்ட், 44 ஒருநாள் போட்டிகள், 12 டுவென்டி டுவென்டிகள் உட்பட, உள்ளூர் போட்டிகள் சிலவற்றையும் ஒளிபரப்பும் உரிமையை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் பெற்றுள்ளது.

அடுத்தடுத்து அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இந்த போட்டிகளில் இந்திய அணி பங்குகொள்ளும் போட்டிகள், இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் பங்குகொள்ளும் முக்கோண ஒருநாள் தொடர் மற்றும் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை மேற்கிந்திய தீவுகள் ஆகியன பங்குகொள்ளும் போட்டிகளும் அடங்கும்.

# ஐ பி எல் குறித்து புதிய தீர்மானங்கள்

அடுத்த ஐ பி எல் போட்டிக்கு வீரர்களை ஏலம் விடுதல் அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து ஐ பி எல் போட்டிகள் ஏப்ரல் 4 ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 27 ஆம் திகதி வரை நடைபெறும். ஐ பி எல் போட்டிகளை நடத்துவது தொடர்பாக, அதன் நிர்வாகக் குழு சில தினங்களுக்கு முன்னர் கூடியிருந்தது.

இதில் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. அண்மையில் கொச்சி



டஸ்கர்ஸ் அணி விதிமுறைகளுக்கு மாறாக நடந்துகொண்டமையின் காரணமாக, ஐ பி எல் இலிருந்து அந்த அணி விலக்கப்பட்டது. அதன்படி, அடுத்த ஐ பி எல் போட்டிகளில் 9 அணிகள் மாத்திரமே போட்டியிடும். எனவே, இப்போட்டியின்போது, ஒவ்வொரு அணியும் மற்றய அணிகளுடன் இரண்டு தடவைகள் மோதும். இந்தக் கணக்கின்படி 72 லீக் போட்டிகள், 2 அரையிறுதிப் போட்டிகள், மூன்றாம் இடத்திற்கான போட்டி, இறுதிப் போட்டி என மொத்தமாக 76 போட்டிகள் நடைபெறும்.

முன்னைய நாட்களில் ஒவ்வொரு அணியிலும் 30 வீரர்களே இடம்பெற்றிருந்தனர். தற்போது இதனை 33 ஆக அதிகரிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஒவ்வொரு அணியிலும் வெளிநாட்டு வீரர்கள் 4 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ஜொகோவிச், கிவிடோ விருது பெறுகின்றனர்

உலகப் புகழ் டென்னிஸ் நட்சத்திரங்களான செர்பிய வீரர் நொவக் ஜொகோ விச் மற்றும் செக்குடியரசின் வீராங்கனை பெட்ரா சிவிடோவோ ஆகிய இருவரும் 2011 ஆம் ஆண்டின் ஐ.டி.எஃப். உலக செம்பியன்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.





சர்வதேச டெஸ்ட் சம்மேளனம் வருடாந்தம் இந்த விருதை வழங்கி வருகின்றது. குறித்த விருதைப் பெறும் ஜொகோவிச் நடப்பு ஆண்டில் அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ், விம்பிள்டன், அமெரிக்க பகிரங்க டென்னிஸ் ஆகியவற்றில் வெற்றியீட்டி பட்டங்களைப் பெற்று முதன்மை நிலையில் இருந்து வருகின்ற ஒரு வீரராவார்.

அவ்வாறே, வீராங்கனை கிவிடோவோ முதன்முறையாக விம்பிள்டன் பட்டத்தை வென்றதுடன் தரப்பட்டியலிலும் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# பொன்டிங் இன்னமும் சிறந்த வீரர்தான்



டிராவிட்

'உலக அணிகளை அச்சுறுத்தும் துடுப்பாட்ட வீரராக ரிக்கி பொன்டிங்கை கருதமுடியும்' என்று இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ராஹுல் டிராவிட் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், "அண்மைக்காலமாக, ரிக்கி பொன்டிங் துடுப்பாட்டத்தில் சோபிக்காத நிலையிலேயே இருந்து வருகின்றார். ஆனால், தென்னாபிரிக்காவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பாக அரைச்சதம் கடந்து முக்கிய பங்களிப்பை வழங்கினார். ஆகையால் அவர் விரைவில் உத்வேகமான ஆட்டத்தைப் பெறுவார் என்று எதிர்பார்க்கிறேன். இந்தியாவுடனான போட்டியில் ரிக்கி பொன்டிங் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்புவார். நிச்சயம் அவர் சாதிப்பார். இன்னமும் பொன்டிங் சிறந்தவொரு வீரராகத்தான் உள்ளார்" என்று டிராவிட் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் மிகப் பெரிய தொலைநோக்கி: மெகலன்





அவுஸ்திரேலியாவின் கென்பரா நகரில் அமைந்துள்ள அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள், இன்டர்நெஷனல் கன்சார்டியத்துடன் இணைந்து, உலகின் மிகப் பெரிய தொலைநோக்கி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஹபள் தொலைநோக்கியைவிட, 10 மடங்கு துல்லியமாக படங்களைக் காட்டும் திறன்கொண்ட இந்த தொலைநோக்கிக்கு 'ராட்சத மெகலன் தொலைநோக்கி' (Giant Magellan Telescope - GMT) என பெயரிடப்பட்டுள்ளது. பூமியிலிருந்து 12.5 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில், விண்வெளியில் உள்ள எந்த ஒரு பொருளையும் அவதானித்து- ஆராய்வதற்கு ஏற்றவகையில் இந்த தொலைநோக்கி வடிவமைக்கப்பட்டு வருகின்றது. சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இத்தொலைநோக்கி வடிவமைக்கப்பட்டு வருகின்றது.


'ரிசர்ச் ஸ்கூல் ஒஃப் எஸ்ட்ரொனமி என்ட் எஸ்ட்ரோபிசிக்ஸ்' அமைப்பின் இயக்குநரான ஹார்வே பட்சர் இதுபற்றிக் கூறும்போது, ''புதிய தொழில்நுட்பத்துடன் உருவாகும் ராட்சத மெகலன் தொலைநோக்கியானது, விண்வெளியின் பல அரிய விடயங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு உதவும். மேலும் 6 அல்லது 7 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் பால்வீதி எவ்வாறு இருந்தது? என்பதைப் பற்றியும் அறிந்துகொள்வதற்கு இதன்மூலம் சாத்தியப்படும்'' என்றார். எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் மெகலன் தொலைநோக்கி முழு வடிவம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. அதன்பின்னர் சிலி நாட்டின் அந்தீஸ் மலைத்தொடரின் உயரமான பகுதியொன்றில் இது நிறுவப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# பூமிக்கு நிகரான குளிர்ச்சியான நட்சத்திரம்

பூமியைப் போன்று குளிர்ச்சியாக இருக்கும் WD 0806-661B என்ற நட்சத்திரத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதன் மேற்பகுதி பூமியின் கோடைகாலத்தைப் போன்று உள்ளது. இந்த நட்சத்திரம் சூரிய குடும்பத்தின் பெரிய கோளான வியாழனை சுற்றி வருகின்றது. நாஸாவின் ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கிமூலமே இந்த குளிர் நட்சத்திரத்தை வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இது, பூமியையும் அதன் சுற்றுப் பாதையையும் கடக்க 63 பில்லியன் ஒளி ஆண்டுகள் எடுக்கின்றன. இந்த கபில குள்ள நட்சத்திரமானது (Brown Dwarf) ஏனைய நட்சத்திரங்களை ஒத்திருக்கின்றது. அதனுள் மேகத்தூசுகளும் வாயுவும் உள்ளன. இந்த நட்சத்திரம் தன்னுள்ளே போதுமான அளவு மேகத் தூசுகளை வைத்துக்கொள்ளத் தவறினால், வெப்ப அணுவியக்க வினைபுரிந்து தீப்பற்றி எரிந்துவிடும்.

இந்த நட்சத்திரத்தின் மேற்பகுதி வெப்பநிலை 27°C முதல் 80°C வரை காணப்படும். இந்த வெப்பநிலையானது பூமியில் நிலவும் வெப்பநிலையை ஒத்திருப்பதோடு, மனிதர்களுக்கு ஏற்றதாகவும் இருக்கிறது.











# உயிர் வாழ வாய்ப்புள்ளதாகக் கருதப்படும் 'கெப்லர் 22b'

உயிர்கள் வாழக்கூடிய வாய்ப்புள்ள கிரகம் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.




சுமார் 600 ஒளிவருடங்கள் தொலைவில் இருப்பதாகக் கூறப்படும் இந்த கிரகத்திற்கு 'கெப்லர் - 22b' என்று பெயரிடப்பட்டுள்ளது.

நீர் உட்பட, உயிரினங்கள் வாழத் தேவையான சூழ்நிலை, இந்தக் கிரகத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த கிரகம், சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தை சுற்றி வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூமியைத் தவிர விண்வெளியில் உயிரினங்கள் வாழக்கூடிய வேறு கிரகங்கள் இருக்கின்றனவா? என்பதைக் கண்டறிவதற்காக, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாஸா, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், கெப்லர் தொலைநோக்கி மூலம் விண்வெளியை ஆராயத் தொடங்கியது. பின்னர் கடந்த பெப்ரவரி மாதத்தில் 'கெப்லர்-22b' உட்பட, மேலும் 54 புறக்கோள்களில் உயிரினம் வாழக்கூடிய சாத்தியம் இருக்கலாம் என கெப்லரால் அறிவிக்கப்பட்டது. அதன்படி, தற்போது எமது சூரியனை ஒத்த விண்மீன் ஒன்றைச் சுற்றிவருகின்ற உயிரினம் வாழக்கூடிய வலயம் ஒன்றில் பூமியை ஒத்த தன்மைகளுடன் கெப்லர்-22b எனும் புறக்கோள் இருப்பதாக முதன்முதலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.






'கெப்லர் - 22b' என்ற இந்தப் புறக்கோள், பூமியைவிட 2.4 மடங்கு பெரியது. இதன் மேற்பரப்பின் சராசரி வெப்பநிலை 22°C ஆகும். எனினும், கெப்லர்-22b புறக்கோளில் பாறைகளா? அல்லது வளிமமா? அல்லது திரவமா? அதிகமாக உள்ளது என்பது பற்றி கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: அரசியல்

## லெனின்

விளாடிமிர் இலிக் உலியனோவ் (Viladimir Ilyich) எனும் இயற் பெயரைக் கொண்டு பிற்காலத்தில் லெனின் என்ற புனைபெயர் பூண்ட இவர், 1870 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி சிம்பிர்ஸ்க் (Simbirsk) எனும் ஊரில் பிறந்தார். தனது மாணவப் பராயத்தில் கல்வித் திறமைக்கு தங்கப்பதக்கம் பெற்ற லெனின், தனது 16 ஆவது வயதிலேயே காஸான் பல்கலைக்கழகத்தில் நீதித் துறை மாணவனாகச் சேர்ந்தார். அங்கு புரட்சி இயக்கமொன்றில் இணைந்ததன் காரணமாக, கைது செய்யப்பட்டமையால், அவருடைய பல்கலைக்கழகக் கல்வி முற்றுப்பெற்றது.

காஸான் மாகாணத்தில் லெனின் ரஷ்ய புரட்சிப்

1893 இல் பிற்றோகிராட்டில் வக்கீல் தொழிலை ஆரம்பித்த லெனின், தமது வக்கீல் தொழிலிலும் மேலாக நகரத் தொழிலாளர் மத்தியில் மார்க்ஸிசவாதத்தை பிரச்சாரம் செய்வதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார். இதனால், அபரிமிதமான செல்வாக்கைப் பெற்ற இவர், பின்னர் சுவிற்சர்லாந்து, பெரிஸ், பேர்லின் முதலிய நகரங்களுக்குச் சென்று அங்கெல்லாம் வசித்த ரஷ்ய மார்க்ஸிசவாதிகளை ஒன்றுதிரட்டி, ரஷ்யாவின் தொழிலாளர் இயக்கத்திற்கு ஆக்கந்தரவல்ல ஓர்



(1870-1924)



பிரச்சாரக் கூட்டங்களில் தனக்கென ஒரு தனிப்பெயரையும் மதிப்பையும் பெற்றிருந்தார். ஏறக்குறைய அக்காலகட்டத்திற்கு 100 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கார்ல் மார்க்ஸின் பொதுவுடமைவாதத்தை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டார். இதன் காரணமாகவே இவர், கார்ல் மார்க்ஸின் பொதுவுடமைக் கொள்கைகளை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்தார். தொடர்ந்து சட்டப் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்து, 1891 இல் பிற்றோகிராட் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவனாகத் தேறினார்.

அமைப்பை உருவாக்கினார்.

1895 இல் நாடு திரும்பிய லெனின் ஒரு தொழிற்சாலையில், தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு தலைமை தாங்கியபொழுது அரசால் கைது செய்யப்பட்டு, 14 மாதகாலம் சிறையில் அடைக்கப்பட்டார். இதன்பின்னர் அரசு, சைபீரியா என்னும் அடர்ந்த காட்டிற்கு 3 ஆண்டுகளுக்கு இவரை நாடு கடத்தியது. இத்தண்டனையின் பின்னர் 1900 இல் மியூனிக் சென்று அங்கு 'இஸ்க்ரா' (Iskra) எனும் பத்திரிகையின் ஆசிரியரானார். 'இஸ்க்ரா' என்றால் 'தீப்பொறி' என்றே அர்த்தப்படுகிறது. இப்பத்திரிகை ரஷ்யாவின் பல பகுதிகளுக்கு மிக ரகசியமாக அனுப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அப்பத்திரிகையைப் படித்த தொழிலாளர் வர்க்கம் தம் விமோசனத்திற்கான காலம் மிக நெருங்கிவிட்டதை உணர்ந்தனர். 1902 முதல் லண்டனில் குடியேறிய லெனின் அங்கிருந்து பத்திரிகையை தொடர்ந்து பிரசுரித்தார். அப்பொழுது தாம் அங்கம் வகித்த சமூக குடியாட்சி கட்சி இரண்டாகப் பிளவுபட்டதால் தீவிரமாகச் செயற்படும் 'பொல்ஸ்விக்' கட்சிக்குத் தலைமை தாங்கினார்.

1917 இல் முதலாம் உலகப் போரில் ரஷ்யா படுதோல்விகளைச் சந்தித்தமையால் விவசாயிகள், தொழிலாளர்களுடன் ராணுவத்தினரும் இணைந்து புரட்சிக்கு கைகொடுத்தனர். அதே ஆண்டு மார்ச் மாதம் ஸார் பதவி துறக்கவே, கெரென்சிக்கி என்பவரின் தலைமையில் தற்காலிக அரசாங்கம் நாட்டை வழிநடத்தியது. எனினும், அந்த அரசால் எவ்வித பலனும் இல்லாததால் 1917 ஒக்டோபர் 25 ஆம் திகதி லெனின் மற்றும் ட்ரொஸ்கியின் தலைமையில் நடாத்தப்பட்ட புரட்சி வெற்றிபெற்றது. இதனால், உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கத்திற்கு லெனின் தலைவரானார். புதிய ரஷ்யாவை ஒரு புது வல்லரசாக வழிநடத்தி அதனை செயல் வடிவமாக்கினார். உலகில் முதலாவது பொதுவுடமை அரசை நிறுவிய லெனின் அவர்கள் 1924 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி இவ்வுல வாழ்வை விட்டு மறைந்தார். இருப்பினும், அவரது இறந்த உடல் பதப்படுத்தப்பட்டு, மொஸ்கோவின் அருங்காட்சியகத்தில் தற்போதும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

ஆர்.ஜே

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 4416

அஹமட் அஸ்ஸாப், ஹாஜியார் வீதி, மருதமுனை - 06.



அங். இல: 4417

ஐ.இஸ்ரா பானு, கல்லஞ்சியாகம, காகம.



அங். இல: 4418

யோ.சுபலக்ஸசன் வலி வடக்கு, தெல்லிப்பளை.



அங். இல: 4419

ஜே.எஃப்.பஸ்னா, கடஹபொல, ஹொரம்பாவ.



அங். இல: 4420

அ.மெரின் சாளினி, மடுக்கரை, நானாட்டான்.



அங். இல: 4421

ச.பிரகதீசன், பள்ளி வீதி, கொழும்பு-15.



அங். இல: 4422

சி.கார்த்திக், பியரீ, தலைமன்னார்.



அங். இல: 4423

எஸ்.எம்.சர்பான், எதுன்கஹகொட்டுவ.



அங். இல: 4424

ஐ.எம்.மிர்ஷான், அருப்பொல தோட்டவீதி கண்டி.



அங். இல: 4425

ஆர்.டிலக்ஷி, புங்குன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

# செயற்கைப் பற்கள்




பொதுவாக மனிதனுக்கு 32 பற்கள் உள்ளன. இவை விபத்து, நோய் சுகாதாரமின்மை, கல்சியக் குறைவு, பரம்பரை நோய் என்ற பலவித காரணங்களால் உதிர வாய்ப்புள்ளது. அவ்வாறு உதிரும் பற்களுக்குப் பதிலாக எலும்பு அல்லது தங்கத்தை அவ்விடத்தில் பொருத்திக்கொள்வார்கள். இதனை செயற்கைப் பற்கள் (பொய்ப்பல்) என்று கூறுவர். இதன்மூலம் அருகில் இருக்கும் பற்களுக்குப் பிடிமானம் கிடைக்கின்றது.





ஒரு பல் உதிர்ந்தாலும் நாக்கு, பல் இடைவெளியில் அடிபட வாய்ப்புள்ளதால் பேச்சுக் குளறும். கி.மு.1000 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த 'ஃபீனிசியன்' மனிதனின் உடல், அகழ்வாராய்ச்சியில் கிடைத்தபோது, அதில் அவன் நான்கு செயற்கைப் பற்களை தங்கக் கம்பிகளால் கட்டியிருந்தமை தெரியவந்தது. கி.மு.700 களில் சிலர் தந்தத்தாலும், தங்கத்தாலும் பற்களைக் கட்டியிருந்தனர் என்பதையும் அகழ்வாராய்ச்சித் தகவல்கள் தெரிவித்துள்ளன. 1770 இல் பெரிஸில் ஃபோர்சிலின் மூலம் பற்கள் தயாரிக்கப்பட்டது. தற்போது



இத்துறையில் பல நவீன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்பற்கள் அனேகமாக, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றாலும் அழிவதில்லை. அத்துடன், இவற்றின் வேர் கெடுவதாலேயே இவை விழுகின்றன. ஒரு பல் விழுந்தாலும் முக அமைப்பில் சிறிதளவு மாறுதல்கள் ஏற்பட்டுவிடும்.




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:...............................

முகவரி:...............................

...............................

பாடசாலை:...............................

வகுப்பு:...............................

திகதி: ...............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னலில் இருந்து காப்பாற்றும் இடிதாங்கி



மின்னலுக்கு மின் தன்மை உண்டு என்பது யாவரும் அறிந்ததே. இந்த மின்னலானது, பரந்த வெளிகள், உயரமான கட்டடங்கள் மற்றும் பாரிய மரங்களையே அதிகமாகத் தாக்குகின்றன. இது சிறு சிறு ஐஸ்கட்டிகளுடன் காணப்படும் குளிர்வடைந்த மழை மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் அல்லது உராய்வடைவதால் ஏற்படுகின்றது.

மின்னல் தாக்கும்போது, பல்வேறு விதமான சேதங்கள் உண்டாவதனால், அதிலிருந்து தப்பிக்கவென 1760 இல் பெஞ்சமின் பிராங்ளின் என்பவர் இடிதாங்கியைக் கண்டுபிடித்தார். அதனை முதன்முதலாக அமெரிக்காவின் பிலடெல்வியாவைச் சேர்ந்த வியாபாரி ஒருவருடைய வீட்டிலேயே பொருத்தினார். அதற்கு கடும் எதிர்ப்பு, அக்காலகட்டத்தில் காணப்பட்டது. எனினும், அதன்பின்னரான காலப்பகுதிகளில் அமெரிக்காவின் அரசாங்கக் கட்டடங்கள் பலவற்றிலும் இடிதாங்கிகளை அமைத்தார்கள். இதற்கு பிரான்ஸ் நாட்டுத் தூதரகம் தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த வண்ணம் இருந்தது.



ஆயினும், 1782 இல் பிரான்ஸ் நாட்டுத் தூதரகத்தை கடுமையாக மின்னல் தாக்கியதால், வேறுவழியின்றி பிரான்ஸும் இடிதாங்கியை அமைத்தது.

இந்த இடிதாங்கி, உயர்ந்த கட்டடங்களில் உலோகத் தகடு ஒன்றுடன் ஒரு வயரின் மூலமாக, கட்டடத்தின் உச்சியில் இருந்து பூமி வரையில் பொருத்தப்பட்டிருக்கும். உயர்ந்த கட்டடங்களை மின்னல் தாக்கும்போது, அதன் மின்சக்தி இந்த இடிதாங்கியில் இணைக்கப்பட்டிருக்கும் வயர் வழியாக பூமிக்குள் இறங்கி விடுகின்றது. இதனால், கட்டடங்களும் உயிர்களும் மின்னல் ஆபத்தில் இருந்து காப்பாற்றப்படுகின்றன.

# தாவர வளர்ச்சிக்கு இசை!

வடக்கு ஜப்பானில் உள்ள யெமகட்டா என்ற பகுதியில் தக்காளி, கத்தரிக்காய் போன்ற





காய்கறிச் செடிகள் மற்றும் கொய்யா, மாமரம் போன்ற மரங்களும் மிக வேகமாக வளர்ந்து பயன்களைத் தருகின்றன. இதற்கான முக்கிய காரணம் இனிமையான இசையாகும். இத்தகைய தாவரங்களில் இருந்து அதிக விளைச்சலைப் பெறுவதற்கென அங்குள்ள விவசாயிகளால் 'ஸ்டீரியோ' என்ற ஒருவகையான கருவி பயன்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் இனிமையான இசைகளை தினமும் ஒரு வேளைக்கு 15 நிமிடங்கள் வரை மொத்தம் மூன்று தடவைகள் ஒலிபரப்பினால், உரியகாலத்தில் அபரிமிதமான விளைச்சலை அவை கொடுக்கின்றன. இதனால், ஜப்பானிய பண்ணையாளர்கள் இந்த ஸ்டீரியோ அமைப்பை விரும்பி வாங்குகின்றனர். மேலும், நெல், சோளம், கோதுமை என அனைத்து விதமான பயிர்களுக்கும் தனித்தனியே இசையமைத்து, அமோக விளைச்சலைப் பெறுகின்றனர்.

# நத்தார் கெரோல் கீதங்கள்





ஒவ்வொரு வருடமும் நத்தார் தினமாகிய டிசம்பர் 25 ஆம் திகதிக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பிருந்தும் 24 ஆம் திகதி இரவும் 25 ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்வரும் சில நாட்களிலும் கெரோல் கீதங்கள் பாடப்படுகின்றன. சில ஊர்களில் கெரோல் வண்டியில் கெரோல் கீதங்களைப் பாடியபடி ஊர்வலம் வருவர்.

## புகழ்வாய்ந்த சில கெரோல் கீதங்கள்

உலகில் இன்றளவும் மிகப்பிரபலமான கெரோல் கீதமானது, சைலன்ட் நைட் (Silent Night) என்ற பாடலாகும். 1816 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இப்பாடல் ஏறக்குறைய 200 வருடங்களாக உலகின் நாலா திசைகளிலும் பாடப்பட்டு வருகின்றது. அவுஸ்திரேலியாவின் ஜோசப் மோர் எனும் குருவானவரால் உருவாக்கப்பட்ட இப்பாடல் உலகெங்கும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இதே ராகத்தில் பாடப்படுகின்றது. அமெரிக்க சிவில் யுத்தம் நடந்தபொழுது, உருவான 'ஜிங்கல் பெல்ஸ்' (Jingle Bells) மற்றொரு உலகப் புகழ்பெற்ற கெரோல் கீதமாகும். அதன்பின் உருவான புகழ்பூத்த கெரோல் கீதம்தான் 'வன் லிட்டில் டவுன் ஒஃப் பெத்லேகம்' (One little town of bethlehem).

## அவுஸ்திரேலிய வானொலி

முதன்முதலாக உலகில் கெரோல் கீதத்தை இசைத்த வானொலி என்ற பெருமை அவுஸ்திரேலிய வானொலியைச் சாரும். 1938 இல் 'கெரோல்ஸ் பை கென்டில் லைட்' எனும் நிகழ்ச்சி மூலம் முதன்முதலாக கெரோல் கீதத்தினை ஒலிபரப்பியது.

'உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் பூமியிலே நல் மனதுள்ளோருக்கு அமைதியும் உண்டாவதாக' என்ற பரிசுத்த வேதாகமத்தின் வசனத்தை அக்கெரோல் கீதம் உள்ளடக்கி இருந்ததாகக் கூறப்படுகின்றது. 'கெரோல்' என்ற சொல் ஒரு பிரெஞ்ச் மொழிச் சொல்லாகும். அம்மொழியிலுள்ள 'கெரோல் அவுலயின்' என்ற வசனத்தில் இருந்தே கெரோல் என்ற சொல் வந்ததாகக் கருதப்படுகின்றது. அதில் கெரோல் என்றால் ஆடல் என்றும் அவுலயின் என்றால் 'குழல் ஊதுதல்' என்றும் அர்த்தமாகும். 'கென்டா' எனும் பெயரில் இலத்தீன் மொழியில் பாடப்பட்ட கெரோல் கீதம் முன்னைய காலத்தில் உலகெங்கும் பரவியதோடு, ஐரோப்பாவின் பல்வேறு மொழிகளிலும் பின்னர் பாடப்பட்டு, மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. இன்று கெரோல் என மருவி வந்த இந்தச் சொல்லை கிரேக்கர்களே முதன்முதலாகப் பயன்படுத்தினர்.

## இலங்கையில் கெரோல் கீதம்

இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் இருந்தே கெரோல் கீதம் இயற்றிப் பாடப்பட்டதாக கருதப்படுகிறது. தென் இலங்கையில் சேவையாற்றிய பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஐரோப்பிய கத்தோலிக்க குருவானவரான அந்தோனியோ என்பவரால் இலங்கையில் முதன்முதலாக கெரோல் கீதம் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும், அக்கீதம் தற்போது கைவசம் இல்லை என்பது கவலைக்குரியதாகும். 1705 இல் ஜக்கோமே கொன்சல்வாஸ் எனும் குருவானவரால் கெரோல் கீதம் இயற்றப்பட்டுப் பாடப்பட்டது.

(அ)

# இயேசுவின் பிறப்பைச் சித்தரிக்கும் 'பாலன் குடில்'

நத்தார் பண்டிகைக் காலத்தில் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்களின் இல்லங்கள் தோறும் பாலன் குடில்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால், இதனை முதன்முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் அருட்திரு பிரான்சிஸ் எனும் குருவானவர் ஆவார். இயேசு பாலன் பெத்லகேம் நகரில் மாட்டுத் தொழுவத்தில் ஏழ்மையுடன் பிறந்தமையால், அவரையும் அவரது பெற்றோரையும் தரிசிக்க வந்த வானதூதர், இடையர்கள், மூவரசர்கள் மற்றும் ஆடு மாடுகளைக் கொண்டு சித்தரித்து செயற்கையாக உருவாக்கப்பட்டதே 'பாலன் குடில்' ஆகும்.





## நத்தார் மெழுகுவர்த்தி

இயேசு உலகின் உண்மையான ஒளி என்றும் பாவ இருளில் மூழ்கிய மக்களை மீட்க ஒளியாகப் பிறந்தார் என்பதைக் குறிப்பதற்காக, பெருமளவிலான அலங்கரிக்கப்பட்ட மெழுகுவர்த்திகளை பண்டிகைக் காலத்தில் பயன்படுத்துகின்றனர். அத்துடன், நத்தார் மரத்தை (Christmas Tree) அதிகளவு மெழுகுவர்த்திகளைக்கொண்டு முதன்முதலாக அலங்கரித்தவர் 16ஆம் நூற்றாண்டின் சமயச் சீர்திருத்தவாதியான மார்ட்டின் லூதர் அவர்களே.

## திருத்தூதர்கள்

இயேசுவின் பிறப்பை உலகிற்கு முதன்முதலாக அறிவித்தவர்கள் திருத்தூதர்களே. இத்தாலி நாட்டில் அமைக்கப்பட்ட நத்தார் குடில்களில்தான் முதன்முதலாக தேவதூதர்களின் உருவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 17 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த இந்த வழக்கம் பின்னர் உலகெங்கும் பரவியது. சாந்தியும் சமாதானத் திற்கும் நத்தார் முக்கியத்துவம் அளிப்பதால் கிறிஸ்தவ மக்கள் நத்தார் குடில்களை தம் வீடுகள்தோறும் அலங்காரத்திற்குப் பயன்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை மூளைத்திறன் கொண்ட 'சிறி' ஐஃபோன் அறிமுகம்

தற்போது புதிதாக அறிமுகமாகியுள்ள அப்பிள் ஐஃபோன்-குரலை உணர்ந்துகொள்ளும் தன்மையை மட்டுமல்ல பேசும் மொழியை நன்கு புரிந்துகொள்ளும் தன்மையையும் பெற்றுவிட்டது. ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் ஆகிய மொழிகள் மூலம் இந்த ஐஃபோனிடம் ஏதேனும் கேள்விகளைக் கேட்டு அதற்கான பதிலையும் பெறமுடியும்.

இந்த சிறப்புத்தன்மை ஐஃபோனுக்கு எப்போது கிடைத்தது தெரியுமா? கடந்த ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி அறிமுகமாகிய அப்பிள் ஐஃபோனில் (iPhone 4s) உள்ள 'சிறி' (Siri) எனப்படும் 'எப்ளிகேஷன்' மூலமாகத்தான் அது சாத்தியப்பட்டது.



குறித்த அப்பிள் 'ஐஃபோனில்' ஹோம் (home) 'பட்டனை' தொடர்ச்சியாக அழுத்திக்கொண்டிருந்தால் 'அப்பிள் சிறி' இயங்கத்தொடங்கிவிடும். அதனையடுத்து 'ஸ்க்ரீனில்' (Screen-திரை) மைக்ரோஃபோன் 'ஐக்கன்' தோன்றும். இதன்போது, 'சிறி நீங்கள் யார்?' (Siri who are you?) என்று நாம் கேட்டால் அதற்கான பதிலை ஒலி வடிவில் அது வழங்கும். 'நான் உங்களது அந்தரங்க உதவியாளன்' (I am your personal assistant) என்று அதன் பதில் அமையும்.

இந்த அந்தரங்க உதவியாளனிடம் பெறக்கூடிய உதவிகள் ஏராளம் உள்ளன. நாம் மறக்கின்ற விடயங்களை நமக்கு ஞாபகப்படுத்துவதற்கு 'சிறி'க்கு முடியும். 'வீடு சென்றவுடன் நண்பனுக்கு ஃபோன் பண்ண வேண்டும்' என்று சிறிக்கு ஞாபகமூட்டுமாறு கட்டளை வழங்கினால் உரிய நேரத்தில் அது அதனை ஞாபகப்படுத்தும். அவ்வாறே, 'நான் காரியாலயத்திற்கு வருவதற்கு தாமதமாகும் என்பதை காரியாலயத்திற்கு அறிவிக்கவும்' என்று 'சிறி'யிடம் கட்டளையிட்டால் இந்தத் தகவலை உடனடியாக அது டைப் செய்து அதனை காரியாலயத்திற்கு 'ஈமெயில்' செய்யும்.

**மொழியைப் புரிந்துகொண்டு அதே மொழியில் பதிலையும் அளிக்கும்**

''இன்று வெளியே செல்லும் போது, குடையைக் கொண்டு போக வேண்டியிருக்குமா?'' என்று 'சிறி'யிடம் கேட்டால் இதற்கு பதிலளிக்க 'சிறிக்கு சற்று நேரம் எடுக்கும். எப்படியென்றால், அது உடனடியாக இணைய சேவைக்கு சென்று கால நிலை அறிக்கைகளை வழங்கும் 'வெப்' தளத்துள் நுழைந்து அதில் முழுமையான ஒரு தேடலை மேற்கொள்ளும்.






குறித்த இடத்திலுள்ள பிரதேசத்தின் காலநிலையை அறிந்துகொள்வதற்கு 'சிறி' ஆராய்வுகளை மேற்கொண்டு, சரியான பதிலை வழங்கும். இவை ஒன்றிரண்டு உதாரணங்கள் மாத்திரமே.....

உண்மையில் இதுபோன்று மேலும் ஆயிரக்கணக்கிலான செயல்களை அதனால், ஆற்றமுடியும். இந்த புரோகிராமில் உள்ள விசேட அம்சம் என்னவென்றால், குரலைப் புரிந்துகொள்வது மட்டுமன்றி அதன் அர்த்தத்தை உணர்ந்து செயற்படக்கூடிய தன்மையை பெற்றிருப்பதேயாகும். எனவே, இந்த புதுவகை புரோகிராமைக் கொண்ட 'அப்பிள் சிறி' எப்ளிகேஷன் முறையானது 'செயற்கை மூளைத் திறன்' கொண்ட கணினி புரோகிராம் என்றே குறிப்பிடப்படுகின்றது.

இந்த 'சிறி' புரோகிராம் ஆனது 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறி இன்டர்நெஷனல் (Sri International) எனப்படும் அமெரிக்க நிறுவனம் உருவாக்கியதாகும். இருப்பினும் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு நிறுவனங்களின் கைகளுக்கு மாறிய மேற்படி நிறுவனத்தை அப்பிள் நிறுவனம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி விலைகொடுத்து வாங்கிய

சாத்தியப்பட முடியாதது என்று எண்ணப்பட்ட இந்த நவீன முறையினை சாத்தியப்படுத்தி, ஐஃபோன் ஊடாக, செயற்படுத்திய பெருமை அப்பிள் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மறைந்த ஸ்டீவ் ஜோப்ஸையே சாரும். நீண்ட காலமாக வெறுமனே ஆய்வுகூடத்துடன் மாத்திரமே கட்டுப்பட்டிருந்த இந்த செயற்கை மூளைத்திறனை சமூகமயப்படுத்திய முன்னோடியாகவும் ஸ்டீவ் ஜோப்ஸை கருதமுடியும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 21, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org